REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2023 மே 10 புதன்கிழமை
வரு. 91 இல. 109 | Wednesday 10, May, 2023 | 20பக்கங்கள் | 50/-

### மே 05, 06ஆம் திகதிகளில் சாதனை
## தாமரைக் கோபுரத்தை பார்வையிட்ட 20,833 பேர்
**163 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை**



தாமரைக் கோபுரத்தை பார்வையிட வந்தவர்களின் எண்ணிக்கை சாதனை இலக்கை எட்டியது.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு கடந்த 05 மற்றும் 06 ஆம் 06

## வடக்கு, கிழக்கு எம்.பிக்களை ஜனாதிபதி ஒரே நேரத்தில் சந்திப்பார்
**TNA தலைவருடனான சந்திப்பில் இணக்கம்**




இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் நாளை வியாழன் மற்றும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நாட்களில் நடக்கவுள்ள சந்திப்புகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் எம்.பிக்களை ஒரே நேரத்தில் சந்திக்க ஜனாதிபதி 06

## காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரை துரத்தும் கர்மவினை
**இந்த ஒரு வருடத்தினுள் தொடர்ச்சியாக பலர் பலி சபையில் ரோஹித**

லோரன்ஸ் செல்வநாயகம்)



காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தியவர்கள் மற்றும் தொடர்புபட்டிருந்தவர்களை கர்மவினை துரத்திக்கொண்டிருப்பதாகவும், இதனால் போராட்டக்காரர்களில் பலர் தொடர்ச்சியாக மரணித்து வருவதாகவும் முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, களுத்துறையில் சில நாட்களுக்கு முன்னர் 16 வயது சிறுமியொருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய 06

## "அஸ்வெசும" நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு ஜூலை 01 முதல்
**33 இலட்சத்துக்கும் அதிகமானோர் தெரிவு**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படும் "அஸ்வெசும"(ஆறுதல்) நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் பணிகள் ஜூலை 01 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரங்களுக்கமைய, இதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி இடைநிலை, 06

### நாட்டிலுள்ள சகல தாதியர் கல்லூரிகளையும் இணைத்து
# தாதியர்களுக்காக புதிதாக தேசிய பல்கலைக்கழகம்
**சுகாதார அமைச்சின் யோசனைக்கு அமைச்சரவை தீர்மானம்**



**சுகாதார அமைச்சின் கீழுள்ள தாதியர் கல்லூரிகளை, பல்கலைக்கழமாக மாற்றுவது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கமையவே தீர்மானம்**

நாட்டில் அனைத்து தாதியர் கல்லூரிகளையும் ஒன்றிணைத்து இலங்கை தேசிய தாதியர் பல்கலைக்கழகமொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் தாதியர் கல்லூரி, பல்கலைக்கழகமாக மாற்றப்படுவது தொடர்பாக யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனை தொடர்பில் ஆராய்ந்து அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்க விஷேட குழு நியமிக்கப்படவுள்ளது.

இக்குழுவை நியமிக்க 2023 மார்ச் 01ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், கலந்து கொண்டபோதே அமைச்சர் இதனை நேற்று (09) தெரிவித்தார். குறிப்பிட்ட அதிகாரிகளைக் 06

### "அமர கீர்த்தி அதுகோரள மாவத்தை" திறந்து வைப்பு



ஒரு வருடத்திற்கு முன் கொலை செய்யப்பட்ட பொலநறுவை பாராளுமன்ற உறுப்பினர் அமர கீர்த்தியின் முதலாவது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று பல நிகழ்வுகள் நடைபெற்றன. போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கார்பட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட பொலனறுவை சேவாகம வருக்கெல பாதையை "அமர கீர்த்தி அதுகோரள மாவத்தை" என பெயர் சூட்டி திறந்து வைத்தபோது...

## மன்னாரில் பாடசாலைகளுக்கு இராணுவத்தினரின் பாதுகாப்பு

மன்னார் நிருபர்

மன்னாரில் கடந்த சில நாட்களாக சிறுவர்களை இலக்கு வைத்து கடத்தல் முயற்சிகள் இடம்பெறுவதாகவும், கடந்த சனிக்கிழமையும் நேற்று முன்தினமும் ஆள் நடமாட்டம் குறைந்த பாதை வழியாக பயணித்த இரு 06

### அ.தி.மு.க குழுவினருடன் இ.தொ.காவினர் சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தமிழகத்தின் முன்னாள் செய்தித்துறை அமைச்சர் கடம்பூர் செ.ராஜு தலைமையிலான அதிமுக குழுவினர், (08) இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினர். 06

## 92,000 இலங்கையர் அகதிகளாக தஞ்சம்
**தமிழக முகாம்களில் தங்கியுள்ளதாக அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்

அகதிகளாகப் பதிவு செய்த 92,000க்கும் மேற்பட்ட இலங்கையர் தற்போது தமிழ்நாட்டில் தங்கியிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று பாராளுமன்றத்தில் உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர், 92,435 இலங்கையர் அகதி முகாம்களுக்குள்ளோ அல்லது வெளியிலோ தமிழ் நாட்டில் தங்கியுள்ளனர். தமிழகத்தில் தற்போது 06

## தர்ஹா நகர் ஜமாஅத் கவுன்ஸில் தலைவர் மஸா ஆலிம் மறைவு
**நல்லடக்கத்தில் பெருந்திரளானோர் பங்கேற்பு**

அஜ்வாத் பாஸி, பேருவளை விசேட நிருபர்



தர்ஹா நகர் ஜமாஅத் கவுன்ஸில் தலைவரும் சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் முன்னாள் கதீபும் விவாகப் பதிவாளருமான கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எஸ்.ஏ.எம். மஸா ஆலிம் (பஹ்ஜி, வயது 76) நேற்று 06

### 2022 மே 09 வன்முறையில் பலியான
## அமரகீர்த்திக்கு சபையில் நேற்று மௌன அஞ்சலி

லோரன்ஸ் செல்வநாயகம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொலன்னறுவை மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல, படுகொலை செய்யப்பட்டு ஒருவருடம் 06

## முஸ்லிம்கள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து கலந்துரையாட அவசர அழைப்பு
**கட்சி பேதங்களை மறந்து ஒன்றுபடுமாறு அமைச்சர் நஸீர் தெரிவிப்பு**

ஏ.ஜீ.எம். தௌபீக்



வடக்கு, கிழக்கு வாழ் முஸ்லிம் சமூகத்தின் சமகால சவால்கள் தொடர்பில் சமூகப் பிரதிநிதிகளிடம் ஒருமித்த கருத்து நிலவுவது அவசியம். இக் கருத்தொற்றுமையுடனும் போதிய ஆவணங்களுடனும் முஸ்லிம் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும். இதற்காக, சகல முஸ்லிம் தலைமைகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் பேதங்களைப் புறந்தள்ளி ஒன்றுபடுமாறு 06

## ஆப்கானிஸ்தானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்
**4.3 ரிச்டர் அளவில் பதிவாகியது**

ஆப்கானிஸ்தானின் ஃபைசாலா பாத்திலிருந்து தென்கிழக்கே 116 கிலோமீட்டர் தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக நிலநடுக்கத்துக்கான தேசிய மையம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை (09) ஏற்பட்ட இந்நிலநடுக்கம் 4.3 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது. 06

### 2022 மே 09 வன்முறைச் சம்பவங்கள்
## ஜனாதிபதி ஆணைக்குழு அமைத்து விசாரணைகளை நடத்த கோரிக்கை
**ஜனாதிபதியிடம் அமைச்சர்கள் குழு வேண்டுகோள் – பந்துல**



நாட்டில் 2022 மே 09ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகளால் பாராளுமன்ற உறுப்பினரொருவர் கொல்லப்பட்டமை மற்றும் மேலும் பல அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை 06



**ஓமான் முதலீட்டாளர் மீதான தாக்குதல் குறித்து முழு விசாரணை**
நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவிப்பு 03




**மத்திய வங்கி புதிய சட்டமூலம் மீதான விவாதம் ஒத்திவைப்பு**
பிரதமர் தினேஷ் சபையில் அறிவிப்பு 03

## நீதிமன்றில் ஆஜராகிய இம்ரான் கான் கைது
**பாகிஸ்தான் ரேஞ்சர்ஸ் படையினர் அதிரடி**



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்திலுள்ள நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இராணுவம் 06

## அநுராதபுரம் சிறைக்குள் தமிழ் கைதிக்கு கொலை மிரட்டல்
**நீதிமன்றில் ஆஜராக லொஹான் ரத்வத்தைக்கு உத்தரவு**



அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் பிரவேசித்து தமிழ்க் கைதி ஒருவருக்கு கொலை மிரட்டல் விடுத்த சம்பவம் தொடர்பில், நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.

அநுராதபுரம் பிரதான நீதவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதி நாலக சஞ்சீவ ஜயசூரிய ஆகியோர் எதிர்வரும் செப்டெம்பர் 06

## கோதுமை மாவின் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை
**தவறான செய்திகள் உலவுவதாக அரசு மறுப்பு**

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் கோதுமை மாவின் விலையில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லையென, அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று (09) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர், இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவுக்கே விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மாவுக்கான சுங்க வரி 3% அதிகரித்துள்ளது. ஆனால் சந்தையில் 06

## வான் — கார் நேருக்கு நேர் மோதி விபத்து
**வாரியபொலவில் சம்பவம், 08 பேர் காயம்**



குருநாகல் – புத்தளம் வீதியின் வாரியபொல வெரபொல பிரதேசத்தில் நேற்று (09) இடம்பெற்ற வாகன விபத்தில் எட்டுப்பேர் காயமடைந்ததாக வாரியபொல 06

# நகர்வலம்



### கம்பிரிகஸ்வெவ மனாறுல் உலூமில்

## பிரதான பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை

### தீர்வுகாண பாடசாலை சமூகம் கோரிக்கை

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட கம்பிரிகஸ்வெவ மனாறுல் உலூம் மகா வித்தியாலயத்தில் பிரதான மூன்று பாடங்களுக்கு ஆசிரியர் வெற்றிடம் நிலவுவதாக அதிபர் ஜே.ஏ. அசாத் மொஹமட் தெரிவித்தார்.

கணிதம், ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் இன்மையினால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறந்த முறையில் கணிதப் பாடத்தை கற்பித்து வந்த ஆசிரியர் அண்மையில் ஓய்வு பெற்று சென்றதன் பின்னர் அந்த வெற்றிடத்திற்கு மாற்று ஆசிரியர் நியமிக்கப்படவில்லை என தெரிய வருகின்றது.

குறித்த வித்தியாலயத்தில் இருந்து வருடாந்தம் க.பொ.த சாதாரண தர மற்றும் க.பொ.த. உயர் தரத்தில் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றை பெற்று வருவதுடன் பிரதான பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவது மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு வித்திடும். எனவே இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிபர் மற்றும் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நாட்டில் அறநெறிக் கல்வியை கட்டாயப்படுத்த நடவடிக்கை

### அதிகாரிகளுக்கு அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பணிப்பு



**திறப்பனை தினகரன் நிருபர்**

நாட்டில் அறநெறி கல்வியை கட்டாயப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தின் பிரகாரம் எதிர் காலத்தில் அறநெறி பாடசாலைகளுக்கு செல்லாத மாணவர் தொடர்பில் கணக்கெடுப்பு ஒன்றை நடத்துமாறு உரிய அதிகாரிகளை புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கேட்டுக் கொண்டுள்ளார். நாட்டில் அறநெறி கல்வியை தொடராத மாணவர்கள் இருப்பதாக தெரிய வந்ததையிட்டு அந்த மாணவர்களை அறநெறி பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கான வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுக்க அரசாங்கம் முன் வந்துள்ளது.

இன்று சமூகத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு, சிறந்த சமூகமொன்றை கட்டி எழுப்புவதும் அறநெறி கல்வியை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும். இதற்கு அமைய அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் அறிவை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

வாரத்தில் ஞாயிறு தினங்களில் அறநெறிக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தும் காலைவேளைகளில் அதிகமான இடங்களில் தனியார் வகுப்புக்கள் ( டியூஷன் ) இடம் பெறுவதால் அறநெறி பாடசாலைகளுக்கு மாணவர் வருகை குறைவடைந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மிஹிந்தலையில் இம்முறை பொசன் பௌர்ணமி அரசவிழா

### விழாவுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி



**திறப்பனை தினகரன் நிருபர்**

மிஹிந்தலை ரஜமஹா விகாரையை மையமாகக் கொண்டு நடை பெறவுள்ள பொசன் அரச விழா தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று ( 09 ) மிஹிந்தலை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கலாநிதி வளவஹங்குன தம்மரத்ன நாயக்க தேரரின் வழிகாட்டலின் கீழ், பொசன் குழுவின் தலைவரும், மாவட்ட செயலாளருமான ஜானக ஜயசுந்தர தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆண்டு பொசன் பண்டிகையின் தொனிப்பொருள், "எழுந்திரு, விழித்தெழு" என்பதாகும். இங்கு இடம்பெற்ற கூட்டத்தின் போது உரையாற்றிய மிஹிந்தல ரஜமஹா விகாரையின் விகாராதிபதி; கடந்த வெசாக் பண்டிகையின்போது அதிகளவான யாத்திரிகர்கள் இப் பகுதிகளுக்கு வருகை தந்துள்ளதால் பொசன் காலங்களிலும் அதிகளவான பக்தர்கள் வருவார்கள் என எதிர் பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

2019ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொண்டாடப்படவுள்ள பொசன் அரச பண்டிகைக்கு அனைத்து நிறுவனங்களும் தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இங்கு வரும் பக்தர்களின் வாகனங்களை நிறுத்துவதற்குரிய இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் அந்த இடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கு பணம் வசூலிக்கப்படமாட்டாது. அத்துடன், இங்கு விற்பனைக்காக சந்தைப்படுத்தப்படும் பொருட்களின் விலைகள் தொடர்பில் முறையான ஒழுங்குமுறை ஒன்றை ஏற்படுத்தவும் , அதே போன்று சந்தைக் கடைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இங்கு சுட்டிக்காட்டினார்.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 25 விசேட பூஜை இடம் பெறவுள்ளது. ஜூன் 02 முதல் 04 ஆம் திகதி வரை மிஹிந்தலையை மையமாக வைத்து பல விசேட நிகழ்வுகளை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத் தினத்தை கொண்டாடுவதற்கு சுமார் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் இப் பகுதியை நோக்கி வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதுடன், இக் குழுவினருக்கு அன்னதானம் வழங்கும் செயற்பாடுகள் திறப்பனை, கஹட்டகஸ்திகிலிய, ஹொரோவபதான, ரம்பேவ ஆகிய பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

பொசன் வாரத்தில் இறைச்சிக் கடைகள் மற்றும் மதுபானக் கடைகள் மூடப்படும் மற்றும் சட்ட விரோத போதைப் பொருள் மற்றும் மதுபானம் விற்பனை செய்யும் இடங்களை சுற்றிவளைத்து சட்டத்தை அமுல்படுத்த பாதுகாப்புப் படையினர் விசேட வேலைத்திட்டத்தை தயாரித்துள்ளனர்.

பொசன் காலத்தில் சகல வீடுகளிலும் வர்த்தக ஸ்தலங்களிலும் பௌத்த கொடியை ஏற்றுமாறு மிஹிந்தல விஹாராதிபதி பகிரங்க அழைப்பொன்றையும் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வெலிகம பத்ர் மன்ற ஏற்பாட்டில்; க.பொ.த சா/த மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

**வெலிகம தினகரன் நிருபர்**

இவ்வருடம் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் நலன் கருதியும், பரீட்சை பெறுபேற்றை உயர்த்தும் நோக்கிலும் வெலிகம பத்ர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள மாபெரும் கல்விக்கருத்தரங்கு வார இறுதி நாட்களில் வெலிகம அறபா மத்திய கல்லூரியில் நடைபெற்று வருகிறது.

மாத்தறை மாவட்ட தமிழ் மொழி மூல பாடசாலைகளின் கல்விகற்கும் மாணவர்கள் இதில் கலந்து கொள்ள முடியும். காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை நடைபெறும் இக்கருத்தரங்கில் வரலாறு, இஸ்லாம், தமிழ், விஞ்ஞானம், மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் நடைபெறவுள்ளன.

சிறந்த அனுபவமுள்ள ஆசிரியர்களால் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டு வருவதோடு மாணவர்கள் பாடசாலை சீருடையுடனேயே கலந்து கொள்ளல் வேண்டும். எதிர்வரும் 13ம் திகதி இஸ்லாம் பாடமும் 14ம் திகதி தமிழ் மற்றும் 20,21ம் திகதிகளில் முறையே விஞ்ஞானம், கணிதப் பாடங்களும் நடைபெறவுள்ளன.

வெளிப்பாடசாலை மாணவர்கள், பொறுப்பாசிரியர்களுடன் சமுகம் தருவது சிறப்புடையது.

# முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 24 ஆம் திகதி தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெறும். நேற்று முன்தினம் (08) நடைபெற்ற விசேட செயற்குழுக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதாக போரத்தின் செயலாளர் சிஹார் அனீஸ் தெரிவித்தார்.

காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை நிகழ்வுகள் நடைபெற இருப்பதோடு இதன் போது 2023/24ஆம் ஆண்டுக்கான தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட செயற்குழு உறுப்பினர் தெரிவுகள் இடம்பெறும். அத்தோடு உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் போரத்தின் யாப்பில் சில திருத்தம் மேற்கொள்ளப்படவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் ஊடாக மாத்திரமே பொதுக்கூட்டத்திற்கான அழைப்புகள் அனுப்பப்பட இருப்பதாகவும் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறும் செயலாளர் கோரியுள்ளார்.





பேருவளை, மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 2023ஆம் வருடத்திற்கான புது மாணவர்களை சேர்க்கும் நிகழ்வு பாடசாலையின் புதிய அதிபர் திரு. குமார் தலைமையில் பாடசாலையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் நிகழ்வுகள் இடம்பெறுவதையும் வலய கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள் உட்பட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளதை படங்களில் காணலாம்.



## கலீபதுஷ்ஷாதுலி மஸா ஆலிமின் மறைவிற்கு அனுதாபம்

## தரீக்காக்களின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவர்

### அனுதாபச் செய்தியில் மர்ஜான் பளீல் எம்.பி

தர்ஹா நகர் ஜமாஅத் கவுன்ஸில் தலைவரும் எமது பிரதேச மூத்த ஆலிம்களில் ஒருவருமான கலீபதுஷ்ஷாதுலி மஸா ஆலிமின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு தான் ஆழ்ந்த கவலையடைந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, தர்ஹா நகரில் வாழ்ந்த அன்னார் எனது தகப்பனார் மர்ஹூம் பளீல் ஹாஜியாருடனும் எனது குடும்பத்தினருடனும் மிகவும் நெருக்கமாக பழகினார். தான் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றபோது அவர் எனக்கு வாழ்த்தும் தெரிவித்ததை இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூருகிறேன். சுன்னத்துல் வல்ஜமாஅத் கொள்கையின் அடிப்படையில் வாழ்ந்த அன்னார், தரீக்காக்களின் வளர்ச்சிக்கு முழு மூச்சுடன் பாடுபட்டார்.

அதேபோன்று தான் வாழ்ந்த தர்ஹா நகர் மற்றும் சீனன்கோட்டை பகுதிகளில் ஜும்ஆ பிரசங்கங்களையும் மேற்கொண்டு வந்ததோடு ஜமாஅத் கவுன்ஸிலினூடாக தான் சார்ந்த சமூகத்திற்கு நல்ல பல பணிகளையும் முன்னெடுத்தார். அன்னாரின் நற்பணிகளை வல்ல நாயன் அங்கீகரிக்க வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் தான் பிரார்த்திப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தனது அனுதாபச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## மௌலவி மஸா ஆலிமின் மறைவு ஈடுசெய்ய முடியாதது

### பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

கலீபதுஷ்ஷாதுலி மௌலவி அல் ஹாஜ் எஸ்.எம் மஸா ஆலிம் (பஹ்ஜி)யின் மறைவு ஈடுசெய்ய முடியாத ஓர் பாரிய இழப்பாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் தனது செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது, மர்ஹூம் கலீபா மஸா ஆலிம் தனது தந்தையின் அடிப்பாதையில் சன்மார்க்கக் கல்வி, உலகக் கல்வியின் முன்னேற்றத்திற்காகவும் விஷேடமாக தர்கா நகரின் அபிவிருத்திக்காகவும் ஷாதுலிய்யா தரீக்காவின் முன்னேற்றத்திற்காகவும் மகத்தான பணிகளை செய்து மக்களின் நன்மதிப்பை பெற்றுக் கொண்டார்.

தர்கா நகர் ஜமாத் கவுன்சில், தர்கா நகர் முஅய்யதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் நிர்வாக சபை ஆகியவற்றின் தலைவராக இருந்து ஆற்றிய சேவைகள் அளப்பரியதாகும். முஅய்யதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியை கட்டியெழுப்புவதில் முழு மூச்சுடன் தியாகத்தோடு உழைத்தார். அவரின் மறைவு தர்கா நகருக்கு மாத்திரமின்றி முழு களுத்துறை மாவட்டத்திற்கும் ஓர் பாரிய இழப்பாகுமென அவர் தெரிவித்துள்ளார்.

## தர்ஹா நகருக்கு சேவையாற்றிய பெருந்தகை கலீபதுஷ்ஷாதுலி

### முன்னாள் எம்.பி அஸ்லம் அனுதாபம்

தர்ஹா நகரின் மூத்த உலமாக்களுள் ஒருவரான அன்புக்குரிய கலீபதுஷ்ஷாதுலி மஸா ஆலிமின் திடீர் மறைவு தர்ஹா நகர் வாழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகுமென முன்னாள் மு.கா பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, தர்ஹா நகரில் பிறந்து வளர்ந்த மௌலவி மஸா ஆலிம், பழகுவதற்கு மிகவும் சிறந்தவர். தனது அறிவினைக்கொண்டு தர்கா நகர் என்ற ஊருக்கு பல வழிகளிலும் சேவையாற்றி இன்று எம்மை விட்டு மறைந்துள்ளார். அன்னாரின் நற்காரியங்களை வல்ல நாயன் அங்கீகரிக்க வேண்டுமென அவர் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நஜீப் ஹாஜியார் அனுதாபம்;

கலாநிதி நஜீப் ஹாஜியார் இப்னு அமீர் ஆலிம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில்; கலீபதுஷ்ஷாதுலி மஸா ஆலிமின் திடீர் மறைவுச் செய்தி கேள்விப்பட்டு மிகவும் கவலையடைந்தேன். நீண்டகாலமாக எனது நற்பணிகளுக்கு தோளோடு தோள் நின்று ஆலோசனைகளை வழங்கிய உத்தமர். அன்னார் தர்ஹா நகர் என்ற எமது ஊருக்கு செய்த நல்ல காரியங்களை வல்லநாயன் கபூல் செய்ய வேண்டுமென பிரார்த்திக்கிறேன். மஸா ஆலிமின் மறைவு குறித்து சீனன் கோட்டை பள்ளிச்சங்கம், தர்ஹா நகர் ஜமாஅத் கவுன்ஸில், சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜெமாஅத், அப்ரார் ஜும்மஆ பள்ளி நிர்வாகம் களுத்துறை மாவட்ட ஜெம்இய்யத்துல் உலமா, மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் நிர்வாகம், மேல் மாகாண சபை உறுப்பினர்களான இப்திகார் ஜெமீல், எம்.எம்.எம். அம்ஜாத், பேருவளை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான பதியுத்தீன், பைஸான் நைஸர், ஹஸீப் மரிக்கார், பேருவளை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் ஹஸன் பாஸி ஆகியோரும் அனுதாபச்செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 மே 10 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்




## அரச வைத்தியசாலைகளில் கொடுப்பனவு அறைகள் வசதி

### விரைவில் அறிமுகப்படுத்த அமைச்சரவை அனுமதி

அரசாங்க வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தும் சிகிச்சை அறைகளை (Paying Ward) ஸ்தாபிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். அதன்படி, இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டினருக்காக, நாடு முழுவதுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் இவ்வாறான கட்டணம் செலுத்தும் அறைகள் Paying Ward ஸ்தாபிக்கப்படவுள்ளன.

அரசாங்க வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தும் சிகிச்சை அறைகள் அறிமுகப்படுத்தப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவில் தெரிவித்திருந்தார்.

தனியார் வைத்தியசாலைகளில் செலவு அதிகமாக இருப்பதால், அரச வைத்தியசாலைகளிலும் கட்டணம் செலுத்தும் அறைகளை ஸ்தாபிக்குமாறு பொதுமக்கள் முன்வைத்த கோரிக்கைக்கமைய இந்த திட்டம் முன்மொழியப்படுவதாக ஜனாதிபதி தனது வரவு செலவு திட்ட உரையில் தெரிவித்திருந்தார்.

இதன்படி, முதற்கட்டமாக தேசிய வைத்தியசாலைகளில் இந்த கட்டணம் செலுத்தும் முறைமை அறிமுகப்படுத்தப்படுமென்றும் அவர் தெரிவித்திருந்தார்.

# மக்களின் மனதை வென்றுள்ள தலைவராக ஜனாதிபதி ரணில்

### கருத்துக் கணிப்பில் முதலிடம் பெற்றார்

மக்கள் மத்தியில் ஆதரவு பெருகிவரும் அரசியல்வாதிகளின் பட்டியலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலிடத்தை பிடித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைவரம் மற்றும் மக்களின் நிலைப்பாடு தொடர்பில் அரச நிறுவனமொன்று, அண்மையில் நடத்திய கருத்து கணிப்பிலேயே இவ்விடயம் தெரியவந்துள்ளது.

இதற்கமைய அரசியல்வாதிகளுள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 33 வீதமானோரும், அநுரகுமார திஸாநாயக்கவுக்கு 16 வீதமானோரும், சஜித் பிரேமதாசவுக்கு 12 வீதமானோரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.



கட்சிகளுக்கான செல்வாக்கு பட்டியலில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மக்கள் மத்தியில 21 சதவீத ஆதரவு கிடைத்து முன்னிலையிலுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்திக்கு 17 வீதமும், மொட்டு கட்சிக்கு 15 வீதமும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 11 வீதமும் மக்கள் மத்தியில் ஆதரவு உள்ளதென கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

'ஹெலிகொப்டர்' கூட்டணிக்கு 05 சதவீத ஆதரவும், சுதந்திரக் கட்சிக்கு 04 சதவீத ஆதரவு கிட்டியுள்ள அதேவேளை, சுமார் 24 வீதமானோர் கட்சி சார்பற்ற கொள்கையில் இருப்பதாக தெரியவந்துள்ளது.

நியூ டைமண்ட், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்

## அனர்த்தம், கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தெரிவுக்குழு அவசியம்

### 21 எம்.பிக்கள் சபாநாயகரிடம் கோரிக்கை

நியூ டைமண்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துகள் பற்றிய விபரங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் தொடர்பில், 15 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட விசேட பாராளுமன்ற தெரிவு குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு 21 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு மனுவொன்றை சபாநாயகரிடம் கையளித்துள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் இடம்பெற்ற நியூ டைமண்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துகள் காரணமாக, இலங்கையின் சமுத்திர சூழல் தொகுதிக்கு மற்றும் நீர்வாழ் உயிரினங்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டது. இவ்விபத்துக்களால் ஏற்பட்ட பாதிப்பு, சூழலில் இன்னும் பல வருடங்களுக்கு காணப்படுமென சூழலியலாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

விபத்து நிகழ்ந்தது தொடக்கம் மற்றும் விபத்தின் பின்னர் இடம்பெற்ற பல தலையீடுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக மீண்டும் சமூகத்தில் பேசப்பட்டு வருகின்றது. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் சபையிலும் மற்றும் வெளியிலும் இந்த விபத்து மற்றும் கப்பல் காப்புறுதி நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் அது தொடர்பான பெயர்கள் தொடர்பாக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதுபற்றி ஊடகங்களில் விரிவான பிரசாரங்களும் முடுக்கிவிடப்பட்டன.

இந்த விடயங்களின் உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டுமென மக்கள் பிரதிநிதிகளாக நாம் நம்புகிறோம். எனவே, குறிப்பிட்ட கப்பல் விபத்து தொடர்பாக ஆராய்ந்து தேவையான பரிந்துரைகளை முன்வைக்கும் படி கேட்கிறோம். இதற்கென,

06

மே 09 மோசமான பேரழிவுச் சம்பவங்கள்:

## கடும் நடவடிக்கை எடுக்காதிருந்தால் முழு நாடும் தீக்கிரையாகியிருக்கும்

லோரன்ஸ் செல்வநாயகம்

### அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ சபையில் தெரிவிப்பு

நாட்டில் கடந்த மே 09 திகதி இடம்பெற்ற மோசமான சம்பவங்களை கட்டுப்படுத்த அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்காதிருந்திருந்தால், முழு நாடும் தீக்கிரையாகியிருக்கும்.

06

## மே 09 சம்பவத்தை நினைவு கூரும் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை

### கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்று உத்தரவு

2022 மே 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகளை நினைவுகூரும் வகையில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்ட பேரணிக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லம், நிதி அமைச்சு, அலரி மாளிகை, பிரதமர் அலுவலகம் ஆகியவற்றுக்குள் பிரவேசிக்க தடை விதித்து கோட்டை நீதவான் திலின கமகே நேற்று இந்த (09) தடைஉத்தரவு

06

## அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முற்பட்ட 41 பேர் நாடு கடத்தல்

### கிறிஸ்மஸ் தீவிலிருந்து நேற்று அனுப்பிவைப்பு

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முற்பட்ட 41 இலங்கையர்கள் நேற்று (09) காலை விசேட விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

41 இலங்கையரும் அந்நாட்டு பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு, கிறிஸ்மஸ் தீவில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்களே அந்நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டு நேற்று (09) காலை அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவுஸ்திரேலியாவுக்குச் சொந்தமான ASY 013 விமானத்தில் அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிலிருந்து தமது பயணத்தை ஆரம்பித்த இவர்கள், நேற்றுக் காலை 9.40 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணம் மற்றும் வாழைச்சேனை பிரதேசங்களில் வசிப்பவர்கள் எனவும், இவர்கள் பல ஆழ்கடல் மீன்பிடி படகுகள் மூலம் கடல் கடந்து அவுஸ்திரேலியா சென்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

## ஓமான் முதலீட்டாளர் மீதான தாக்குதல் குறித்து முழு விசாரணை

### சபையில் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஓமான் முதலீட்டாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுமென நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.



கட்டான பிரதேசத்தில் ஓமான் நாட்டு முதலீட்டாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில், நீதி நிலைநாட்டப்படவில்லை. இதனால், குறித்த முதலீட்டாளர் நாட்டை விட்டு வெளியேற நடவடிக்கை எடுத்து வருகிறார். இது தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்று சபையில் தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் சபையில் தெளிவுபடுத்திய எதிர்க்கட்சி எம்.பி காவிந்த ஜயவர்த்தன:

ஓமான் நாட்டு முதலீட்டாளருக்கு சொந்தமான ஆடைத் தொழிற்சாலை கட்டான பிரதேசத்தில் இயங்கி வருகிறது. இதில் அந்த பிரதேசத்தைச் சேர்ந்த 500ற்கும் மேற்பட்டவர்கள் பணி புரிகின்றனர்.

06

## மத்திய வங்கி புதிய சட்டமூலம் மீதான விவாதம் ஒத்திவைப்பு

### பிரதமர் தினேஷ் சபையில் நேற்று அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

மத்திய வங்கியின் உத்தேச புதிய சட்டமூலம் இவ்வாரம் சபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. இதனால், இதை ஒத்திப்போடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.




இம்முடிவுக்கு ஜனாதிபதியும் தமது இணக்கத்தை தெரிவித்துள்ளதாகவும் பிரதமர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகிய எம்பிக்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் மேலும் தெரிவித்த பிரதமர்,

நிதி அமைச்சின் ஆலோசனைக் குழு இன்று கூடவுள்ளது. மத்திய வங்கியின் ஆளுநரும் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார். அந்த வகையில் எதிர்க்கட்சியினரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு, மேற்படி சட்டம் தொடர்பில் கருத்துக்களை தெரிவிக்க முடியும்.

06


Inland Revenue Department
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

வரிசெலுத்துநர்களுக்கான அறிவித்தல்

பின்வரும் வரிக் கொடுப்பனவுகளை 2023,மே 15 அன்று அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளவும்

| | வரி வகை | வரி வகை குறியீடு | காலப்பகுதி குறியீடு |
|---|---|---|---|
| 2022/2023 ஆம வரி மதிப்பீட்டு ஆண்டின் 4ஆம் தவணைக் கொடுப்பனவு | கூட்டிணைந்த வருமான வரி (CIT) | 02 | 22234 |
| | தனியாள் வருமான வரி (IIT) | 05 | 22234 |
| | பங்குடமை வருமான வரி (PIT) | 09 | 22234 |
| 2023 ஏப்பிரலில் நிறுத்திவைக்கப்பட்ட வரி | வட்டி மீதான முற்பண வருமான வரி (AIT) / நிறுத்திவைத்தல் வரி (WHT) | 43 | 23040 |
| | கட்டணங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மீதான முற்பண வருமான வரி (AIT) / நிறுத்திவைத்தல் வரி (WHT) | 44 | 23040 |
| | முற்பண தனியாள் வருமான வரி (APIT) | 03 | 23040 |
| கொடுப்பனவுவகை | | S | |

கொடுப்பனவு நறுக்குகள் கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டாம்

- செலுத்த வேண்டிய வரிகளை இணையவழி வரிக் கொடுப்பனவு தளத்தினூடாக (OTPP) செலுத்தவும்
  மேலதிக விபரங்களுக்கு - 2021.02.08 ஆம் திகதிய PN/PMT/2021-01 இலக்க, 2021.06.08 ஆம் திகதிய PN/PMT/2021-04 , 21.12.2021 ஆம் திகதிய PN/PMT/2021-04 (திருத்தப்பட்ட) ஆம் இலக்க மற்றும் 2022.05.17 ஆம் திகதிய PN/PMT/2022-01 ஆம் இலக்க அறிவித்தல்களைப் பார்க்க www.ird.gov.lk இற்கு செல்லவும்
- இதற்கு மேலதிகமாக, CIT, IIT, PIT & APIT கொடுப்பனவுகள் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் மேற்கொள்ளப்படலாம்
- AIT & WHT க்கான கொடுப்பனவுகள் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் மேற்கொள்ளப்படலாம்
  உங்கள் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை (வுஐ)காசோலையின் பின்பக்கத்தில் எழுதவும். மேலும் கொடுப்பனவு நறுக்குகளின் பின்புகுதியில் மேலதிக தகவல்கள் காணப்படுகின்றன.
- கொடுப்பனவினை வங்கியில் செலுத்தும் போது, அச்சிடப்பட்ட கொடுப்பனவு நறுக்குகள் கிடைக்காதவிடத்து, DIN (இலக்கம்) பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.
  - வாடிக்கையாளர் உதவு மற்றும் ஊக்குவிப்புப் பிரிவு (தொ.பே: 0112134281, 2134282, 2134283 & 2134284) அல்லது
  - https://eservices.ird.gov.lk/Payment/PayingInSlip/Inde இனூடாக

வருமான வரியை செலுத்தாது விடுதல் அல்லது தாமதமாக செலுத்துதல் மீதான தண்டம் தள்ளுபடி செய்யவோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாது என்பதை அறிந்துகொள்ளவும்

இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை அறிந்துகொள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலைத்தளத்தைப் பார்வையிடவும்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

IRD 1944

வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக

www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 206.30 | 219.03 |
| சிங்கப்பூர் டொலர் | 233.49 | 246.88 |
| கனடியன் டொலர் | 228.52 | 242.56 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 388.64 | 409.24 |
| யூரோ | 343.37 | 362.22 |
| சுவிஸ் பிராங்க் | 349.42 | 371.48 |
| ஜப்பான் யென் | 2.3420 | 2.4688 |
| அமெரிக்க டொலர் | 313.45 | 328.67 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 853.41 | கட்டார் ரியால் | 88.05 |
| குவைத் டினார் | 1,050.55 | சவூதி ரியால் | 85.78 |
| ஓமான் ரியால் | 835.69 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 87.61 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 27ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 19

### குறள் தரும் சிந்தனை



இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்

நற்குணமில்லாத மனைவியைத் திருத்த முனையாமல் பணிந்து போகிற கணவன், நல்லோர் முன்னிலையில் நாணமுற்று நிற்கும் நிலைக்கு ஆளாக நேரிடும்.

# உல்லாசப் பயணத்துறையில் நம்பிக்கை தரும் முன்னேற்றம்

இலங்கை கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் அந்நிய செலாவணிப் பற்றாக்குறையுடன் கூடிய பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. அதன் விளைவாக நாட்டின் இயல்புநிலை பாதிக்கப்பட்டதோடு, மக்களும் பல விதமான நெருக்கடிகளுக்கும் அசௌரியங்களுக்கும் முகம்கொடுத்தார்கள்.

இந்நெருக்கடி எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதையிட்டு பெரும்பாலானவர்கள் அன்று கவனம் செலுத்தத் தவறினர். ஆனாலும் அப்பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து அதன் அசௌகரியங்களையும் தாக்கங்களையும் கடந்து பொருளாதார நெருக்கடி தோற்றம் பெறுவதற்கு முன்னரான நிலையை நோக்கி நாடும் மக்களும் தற்போது பயணித்துக் கொண்டிருக்கின்றனர். அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார மேம்பாட்டுத் வேலைத் திட்டங்கள் பாரிய பங்களிப்பு செய்துள்ளன.

இந்நாடு அந்நிய செலாவணி பற்றாக்குறையுடன் கூடிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுப்பதற்கு 2020 ஆம், 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் நிலவிய கொவிட் 19 பெருந்தொற்று பரவுதல் அச்சுறுத்தலும் அதன் தாக்கங்களும் பாதிப்புகளும் மூலகாரணமாக அமைந்திருந்தன.

இத்தொற்று தோற்றம் பெற்றதைத் தொடர்ந்து உலகின் உல்லாசப் பயணத்துறை ஸ்தம்பிதமடைந்து பாதிக்கப்பட்டது. அத்தோடு ஏற்றுமதி, இறக்குமதி துறைகள் மாத்திரமல்லாமல் உற்பத்தித் துறையும் கூட இத்தொற்றின் விளைவாகப் பாதிப்படைந்தன. இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்கு இவை பெரும் சவாலாக அமைந்திருந்தன.

நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய துறைகளில் ஒன்றாக உல்லாசப் பயணத் துறை அண்மைக்காலம் முதல் மாறியுள்ளது. என்றாலும் கொவிட் 19 பெருந்தொற்று உல்லாசப் பயணத்துறை, உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி என்பவற்றைப் பாதித்ததோடு, இந்நாட்டுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கப் பெறுவதிலும் பெருவீழ்ச்சி நிலையை ஏற்படுத்தியது. அது அந்நியச் செலாவணி பற்றாக்குறையுடனான வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்கு வித்திட்டது.

கடந்த வருடம் ஜுலை மாதப் பிற்பகுதி முதல் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படலாயின. அதன் பயனாக, நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் அசௌகரிங்களும் குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டை விட்டு கட்டம் கட்டமாக அகலத் தொடங்கின. இது மக்களுக்கு ஆறுதலாக அமைந்துள்ளது. குறிப்பாக உல்லாசப் பயணிகளின் வருகையிலும் உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியிலும் முன்னேற்றங்கள் ஏற்படலாயின. அதன் ஊடாக அந்நிய செலாவணியில் அதிகரிப்பு ஏற்பட்டது.

அந்த வகையில், இவ்வருடத்தின் முதல் நான்கு மாதங்களிலும் 04 இலட்சத்து 41 ஆயிரத்து 177 உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் அதன் ஊடாக 198 மில்லியன் அமெரிக்க டொலர்களை (6330 கோடி ரூபா) நாடு அந்நிய செலாவணியாகப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வருடம் ஜனவரியில் 102, 545, பெப்ரவரியில் 107,639, மார்ச்சில் 125,495, ஏப்ரலில் ஒரு இலட்சத்துக்கும் மேல் என்றபடி கடந்த நான்கு மாதங்களிலும் மாதத்திற்கு ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டளவில் உல்லாசப் பயணிகள் நாட்டுக்குள் வருகை தந்துள்ளனர் என்றும் அச்சபை குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடத்தின் மார்ச்சில் 161 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டிக் கொண்ட இந்நாடு, இவ்வருட மார்ச்சில் உல்லாசப் பயணத்துறை ஊடாகப் பெற்றுக்கொண்ட வருமானம் 22.8 வீத வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

2021 இல் 194,495 உல்லாசப் பயணிகளும் 2022 இல் 719,978 உல்லாசப் பயணிகளும் வருகை தந்துள்ள போதிலும், முதல் நான்கு மாதங்களிலும் நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்ட உல்லாசப் பயணிகள் வருகை தந்திருப்பதானது, இவ்வருடம் நிறைவடையும் போது உல்லாசப் பயணிகளின் வருகையில் பாரிய அதிகரிப்பு ஏற்படும் என்பதற்கான சமிக்ஞையாகும்.

ஆகவே இந்நாட்டுக்கு அதிகளவில் அந்நிய செலாவணியை ஈட்டிதரும் துறைகளில் ஒன்றாக விளங்கும் உல்லாசப் பயணத்துறை குறித்து கூடுதல் கவனம் செலுத்தி அவற்றை மேம்படுத்துவது அவசியம். அது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைகள் பெற்றுத் தருவதாக அமையும். அந்த வகையில் நுவரெலியா நகரை சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவது குறித்து விஷேட கவனம் செலுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

editor.tkn@lakehouse.lk

# மீன்பிடித் தொழில்துறையில் இலங்கை ஏற்றுமதி மையமாக மாற்றியமைக்கப்படும்

## சீநோர் நிறுவனத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவு

## ஐந்தாண்டுத் திட்டம் சமர்ப்பிப்பு; இணையத்தள வெளியீட்டு விழா

மீன்பிடித் தொழில்துறையின் ஏற்றுமதி மையமாக இலங்கை மாற்றியமைக்கப்படும் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

சீநோர் நிறுவனத்தின் ஐம்பத்தைந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு இலங்கை மன்றத்தில் நேற்றுமுன்தினம் (2023.05.08) சமர்ப்பிக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் இணையத்தள வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

உயர்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குறைந்த செலவில் அதிக மீன் உற்பத்திக்கான படகுகளை உற்பத்தி செய்வதன் மூலம் கடற்றொழில் அமைச்சின் திட்டங்களுக்கு பங்களிக்கும் சீநோர் நிறுவனம் 1967 இல் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டது.

அவ்வைபவத்தில் மேலும் கருத்துத் தெரிவித்த பிரதமர், "எமது நாடு ஒரு புதிய மாற்றத்திற்கு உள்ளாகி, மீன்பிடித் தொழிற்துறை எதிர்காலத்திற்கு பயனளிக்கும் ஒரு புதிய வேலைத்திட்டத்தில் பிரவேசிக்கும் தருணமாக இந்த ஐம்பத்தைந்தாவது ஆண்டு நிறைவை நோக்குவோம். எந்தவொரு நிறுவனமும், அது அரசாங்க நிறுவனமாக இருந்தாலும் சரி, தனியாராக இருந்தாலும் சரி, அதற்கு ஒரு திட்டமும், குறிக்கோளும் இருக்க வேண்டும். அத்தகைய திட்டம் மற்றும் இலக்கு இல்லாமல் ஒரு அமைப்பு முன்னேற முடியாது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையானது நிறுவனங்களையும் நாட்டையும் பாதிக்கின்றது. எனவே, சீநோர் நிறுவனம் அடுத்த ஐந்தாண்டுகளுக்கான திட்டத்தை இன்று முன்வைப்பது மிகவும் முக்கியமானதாகும்.

இந்து சமுத்திரத்தில் மிக முக்கியமான கடல் பாதையில் இலங்கை அமைந்துள்ளது. இது இந்த கடல் மார்க்கத்தின் ஊடாக பயணிக்கும் கப்பல்களைப் பற்றியது மட்டுமல்ல, பெறுமதியான மீன்வளம் மற்றும் அதற்குத் தகுதியானவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வசதிகள் தொடர்பிலும் முன்னோக்கிய திட்டம் தேவை. இந்தத் திட்டங்கள்தான் எமது நாட்டின் எதிர்காலம்.

நாம் சுமார் இருநூறு ஆண்டுகளாக தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி செய்து வருகிறோம். மேலும், எதிர்காலத்தில் மீன் ஏற்றுமதியை அதிகரிக்க முடியும். சீநோர் நிறுவனம் உருவாக்கப்பட்ட பின்னர், மீன்பிடித் தொழிலில் புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பைபர் கிளாஸ் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எமது மீன்பிடித் தொழிலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இந்தத் திட்டத்தில் சுற்றுலாத் துறையில் பிரவேசிக்கக் கூடிய பல்வேறு புதிய படகுகள் தயாரிப்பதற்கான பல புதிய நடவடிக்கைகளும் அடங்கும்.



இலங்கைக் கடலில் இருந்து பிடிக்கப்படும் மீன்கள் சுவை அதிகம் என்று கூறும் ஐரோப்பா, ஜப்பான் நாடுகளின் தேவையை இன்றும் எம்மால் பூர்த்தி செய்ய முடியவில்லை. அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற புதிய செயல் திட்டம் அடித்தளம் அமைக்கிறது. மீன்களை பாதுகாப்பாக சேமிப்பதில் சிக்கல் உள்ளது. அதற்கான புதிய திட்டத்தில் உலக உணவு நிறுவனம் இறங்கியுள்ளது. பைபர் கிளாஸ் தொழில்நுட்பத்தின் மூலம் மீன்களைப் பாதுகாப்பதற்கான வழிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். சர்வதேச சமூகத்துடன் இணக்கமாக செயற்படக்கூடிய துறைகளில் பிரவேசித்து சவாலை வெற்றிகொள்ள வேண்டும். பிரச்சினைகளுக்கு கலந்துரையாடல் மூலம் தீர்வு காண வேண்டும். கடலில் பயணிக்கும் ஒவ்வொரு மீன்பிடிக் கப்பலுக்கும் சமிக்ஞை முறைமையை நிறுவுவதற்குத் தேவையான இயந்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் வேலைத் திட்டத்திலும் நாம் ஈடுபட்டோம்.

எமது கடற் பிராந்தியங்களைக் கடந்து, புதிய தலைமுறையினருக்கு நவீன தொழில்நுட்பப் பயிற்சி அளித்து, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு அவர்களை வழிநடத்துவது அவசியம். புதிய நடவடிக்கையாக, சீநோர் நிறுவனத்தை தொழில்நுட்ப நிறுவனமாக மாற்ற அரசு முழுமையான ஆதரவை வழங்கும்"எனத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,"கடற்றொழில் துறையின் முன்னேற்றத்திற்கு சீநோர் நிறுவனம் பெரிதும் பங்களிக்கிறது. நன்னீர் வளத்தின் மூலம் மக்களுக்கு போசனையை மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பெரிய அளவில் பங்களிக்க முடியும். இதற்கு புதிய தொழில்நுட்பப் படகுகளை பயன்படுத்த வேண்டும். சீநோர் நிறுவனம் அதற்கும் பங்களிக்கிறது. தொலைதூரம் சென்று பல வாரங்களாக படகுகள் மூலம் மீன்பிடித்தல் நடைபெறுகிறது. இந்த மீன்களின் தரம் மற்றும் பாதுகாப்புக்கு, குளிரூட்டல் வசதி கொண்ட படகுகள் அவசியம். இதற்கு சீநோர் நிறுவனத்தின் உதவியை நாங்கள் எதிர்பார்க்கிறோம்"எனத் தெரிவித்தார்.



கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த உரையாற்றுகையில், "இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இதற்கான ஆரம்பப் புள்ளியாக இந்த ஆண்டுவிழா அமைந்துள்ளது. இந்த நிறுவனம் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தந்தை பிலிப் குணவர்தனவின் காலத்தில் நிறுவப்பட்டது. அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடற்றொழிலின் பொற்காலத்தை உருவாக்கினார்.



இந்த நிறுவனத்தை ஒரு சிறந்த மற்றும் வலுவான நிறுவனமாக முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பு. இதுவரை நாட்டைச் சூழவுள்ள கடல்வளத்தை நாம் சரியாக பயன்படுத்திக் கொண்டோமா இல்லையா என்ற சந்தேகம் எமக்கு உள்ளது. இது வெறும் ஐந்தாண்டு செயல் திட்டம் அல்ல. இந்தத் துறையில் போட்டியை எதிர்கொள்ளும் வகையில் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும். ஏனெனில், நாம் சர்வதேசத்தை வெல்ல வேண்டும். அனுபவங்களைப் பெற வேண்டும். இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலமும் இலக்குகளை நிறைவு செய்வதன் மூலமும் தான் நாம் அதைச் செய்ய முடியும்"என்றார்.

இருபத்தைந்து வருட சேவையை நிறைவு செய்த ஊழியர்களுக்கு இதன் போது விருதுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரர், அமைச்சர்களான மனுஷ நாணயக்கார, ரொஷான் ரணசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, தூதுவர்கள், கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து ரத்நாயக்க, சீ நோர் நிறுவனத்தின் தலைவர் துலான் ஹெட்டியாராச்சி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# சைவப்பெரியார் பரிஏறும் பெருமாள்பிள்ளைக்கு கொழும்பில் சனிக்கிழமை அஞ்சலி வைபவம்

தமிழ்நாட்டின் நெல்லை மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட பல சைவசமயப் பெரியார்கள் இலங்கை நாட்டில் தமிழும், சைவமும் தழைத்தோங்க தொண்டுகள் ஆற்றி வருகின்றனர். அமரர்களான எ.எஸ். சங்கரலிங்கம்பிள்ளை, ஜெய கணபதியார்பிள்ளை, வி.டி.வி. தெய்வநாயகம் பிள்ளை, ஜி.எஸ். விஸ்வநாதபிள்ளை, க.சி. சிவசங்கரபிள்ளை, எ.எஸ். சோமசுந்தரம்பிள்ளை ஆகியோர் இலங்கைத் திருநாட்டில் ஆற்றிய சமய, சமூக கலை இலக்கியப் பணிகளை இலங்கைவாழ் மக்கள் என்றும் நினைவுகூருவர்.



அந்தவரிசையில் 'நவதிருப்பதி' என்று அழைக்கப்படும் புனித புண்ணிய ஊர்களில் ஒன்றான திருக்கருவூர் கிராமத்தை பூர்வீகமாகக் கொண்ட மாணிக்கம்பிள்ளை அண்ணாச்சி அவர்களும் குறிப்பிடத்தக்கவர். இவரை 'பரிஏறும் பெருமாள் பிள்ளை' எனவும் சிறப்பித்துக் கூறுவர். இவரது தந்தையார் சைவ சமயத் தொண்டாற்றிய அமரர். ஆர். ஏம். ரெங்கநாதபிள்ளை என்பவராவார். இவர் கதிர்காமம் சடையம்மா மடம், மன்னார் திருக்கேதீஸ்வர திருத்தலம், நல்லை ஆதீனம், கொழும்பு ஜெயந்திநகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணியம் ஆலயம் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டு சமய சமூகப் பணிகளை மேற்கொண்டவராவார்.

அமரர் பரிஏறும் பெருமாள் பிள்ளை (மாணிக்கம்பிள்ளை) அவர்களும் தமது தந்தையார் வழியில் நின்று அவர் விட்டுச்சென்ற அன்னதானப் பணிகளையும், சமயத்தொண்டுகளையும் தளர்வடையாது தொடர்ந்தும் பல தசாப்தகாலமாக ஆற்றிவந்தவராவார்.

கொழும்பு சைவவேளாளர் சமூகத்தினரின், குடும்ப உறுப்பினர்கள் அமரத்துவம் அடையும் போது அவர்களது இறுதிக்கிரியைகளையும், அதனோடு தொடர்புடைய சமய சம்பிரதாயங்கள், சடங்காசாரங்கள் அனைத்தையும் முன்னின்று நடாத்திய பெருமகன் மாணிக்கம்பிள்ளை ஆவார். இந்த உயர்ந்த மனித நேயத்தொண்டை என்றும் எவராலும் மறக்க முடியாது.

அவர் மறைந்து வைகுண்டபிராப்தி அடைந்து ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை (13.05.2023) கொழும்பு கொட்டாஞ்சேனை வரதராஜர் விநாயகர் ஆலய ஐங்கரன் மண்டபத்தில் மாலை 5.00 மணிக்கு இவரது சேவை நலனை நினைவுகூர்ந்து அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

கொழும்பில் சமய சமூகப்பணிகளை, கல்விப்பணிகளை ஆற்றிவரும் வி.டி.வி அறக்கட்டளையினர் இந்த புனித அஞ்சலி கூட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளனர்.

அவரது சமயசமூகப் பணிகளை நினைவுகூர்ந்து அமரர். மாணிக்கம்பிள்ளை அண்ணாச்சி அவர்களுக்கு பலரும் அஞ்சலி செலுத்துகின்றனர்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

விக்கி...

# இந்தியாவில் கடலுக்கு அடியிலான முதலாவது சுரங்கப்பாதை இவ்வருடத்தில் அங்குரார்ப்பணம்

## உட்கட்டமைப்புத்துறையில் இந்தியாவின் சாதனைகள்

உலகின் நீண்ட பாலம், உலகின் மிக உயரமான சிலை, உலகின் மிக உயரமான ரயில்வே பாலம் என உட்கட்டமைப்புத் துறையில் இந்தியா உலக நாடுகளுக்கு முன்னோடியாக திகழ்ந்து வருகிறது. இப்பொழுது அதில் ஒரு மைல்கல்லாக இந்தியாவில் முதன்முதல் கடலுக்கடியில் சுரங்கப்பாதைகள் வரவிருக்கின்றன. ரூ.12,721 கோடி மதிப்பிலான மும்பை கடற்கரை வீதித் திட்டத்தின் ஒரு பகுதியாக கடலுக்கடியில் இரட்டை சுரங்கப்பாதைகள் விரைவில் திறக்கப்பட உள்ளன.

சுமார் 3 கி.மீ நீளமுள்ள நீருக்கடியில் சுரங்கப்பாதை இவ்வருடம் நவம்பரில் திறக்கப்படவிருக்கிறது.

இந்தியாவின் பொருளாரத் தலைநகரான மும்பை சில முக்கிய மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. அதில் ஒன்றுதான் மும்பை கடற்கரை வீதித்திட்டம் (MCRP). இது ஒரு தரம் பிரிக்கப்பட்ட நெடுஞ்சாலை ஆகும், இது தெற்கில் உள்ள மரைன் லைன்களை மும்பையின் மேற்கு கடற்கரையில் வடக்கே கண்டிவாலிக்கு இணைக்கிறது.




இந்தியாவின் கடலுக்கடியிலான முதலாவது சுரங்கப்பாதை நவம்பர் மாதம் திறக்கப்படவுள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக இந்த சுரங்கப்பாதையின் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த சுரங்கப்பாதை கிர்கானுக்கு அருகில் இருந்து, அரேபிய கடல், கிர்கான் சௌபட்டி மற்றும் மலபார் மலையை கடந்து, பிரிட்ஜ் கேண்டி மருத்துவமனைக்கு அருகில் முடிவடையும். பல சவால்களை இந்தத் திட்டம் எதிர்கொண்டது. சுரங்கப்பாதைக்கும் கடற்பரப்பிற்கும் இடையிலான இடைவெளிகள் வழியாக கடல்நீர் கசிவதைத் தடுக்க குழு தொடர்ந்து குழம்பி தவித்தது. சரிவின் விளிம்பில் தங்களுக்கு மேலே உள்ள கடற்பரப்பின் சவாலையும் அவர்கள் எதிர்கொண்டனர். இருப்பினும் அத்தனை சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு இந்த இரட்டை சுரங்கப்பாதைகளை நிறுவியுள்ளனர்.

இத்திட்டம் முடிவடைந்த பின், நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் குறையும். பயண நேரத்தை 45 நிமிடங்களில் இருந்து வெறும் 10 நிமிடங்களாக குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரட்டை சுரங்கப்பாதைகள் மட்டுமின்றி மும்பையில் விரைவில் நீருக்கடியில் புல்லட் ரயில் செல்லவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. மும்பைஅகமதாபாத் இடையே புல்லட் ரயிலுக்கான பணிகள் வேகமாக நடைபெற்று வரும் நிலையில், விரைவில் அதுவும் செயல்பாட்டுக்கு வரும் என்று கூறப்படுகிறது.

## நுகர்வு மையப் பண்பாட்டு ஆக்கிரமிப்பு;

# சுய பொருளாதாரத்தில் நம்பிக்கை கொண்டு நிமிர்ந்து நிற்கும் விருட்சங்களாக பெண்களை மாற்ற வேண்டும்



**நுகர்வு மையப் பண்பாட்டு ஆக்கிரமிப்பை தவிர்த்து வாழும் குடும்பப் பெண்களாகவும் சுய பொருளாதாரத்தின் மீது நம்பிக்கை கொண்டு நிமிர்ந்து நிற்கும் விருட்சங்களாகவும் பெண்களை மாற்றம் அடையச் செய்தல் வேண்டும் என்ற கொள்கைப் பிரகடனத்துடன் காவேரிக் கலா மன்றத்தின் இயக்குனர் வண. பிதா யோசுவா அடிகளாரின் வழிகாட்டலுடன் முன்னெடுக்கப்படும் "மக்கள் பொருளாதார மன்ற" அமைப்பின் ஒருங்கமைப்பாளர் கஜேந்திரன் ரெஜினோல்ட் அது தொடர்பில் கலந்துரையாடிய கருத்துக்கள்,....**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது பொருட்கள் மற்றும் சேவையின் வளர்ச்சியின் அடிப்படையில் அளவிடப்படுகிறது. வீழ்ந்திருக்கும் தம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டிய தேவையும் அவசியமும் சமகாலத்தில் மிக மிக அவசியமானவையே. இருப்பினும் ஒரு நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சி என்பது அந்நாட்டு மக்களின் வாழ்வியல் முறைமையும் அவர்கள் பின்பற்றும் பண்பாட்டு அறமும் இரண்டறக் கலந்திருப்பதன் அடிப்படையில் இருந்து தோற்றம் பெறுவதாகும்.

அந்த வகையில் கிளிநொச்சியை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வரும் 'மக்கள் பொருளாதார மன்றம்' சமுதாயப் பொருளாதாரத்தில் மறுமலர்ச்சி சிந்தனையை விதைத்து வருகின்றது.

இன்றைய இருள் சூழ்ந்த பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் தம் வாழ்க்கையை வெளிச்ச குறிகாட்டிகளாக சமுதாயத்தில் மிளிரச் செய்து கொள்ள சில பெண்களின் வெற்றி குறித்த அனுபவங்களை இங்கு பதிவிடுகின்றோம்.

### அந்த வகையில் முன்பள்ளி ஆசிரியர் நித்தியகல்யாணி

இவர் சிறப்பான தோட்டச் செய்கையாளராகவும் செயற்பட்டு வருகின்றார். அவர் வாழ்வியல் அனுபவங்களை மக்கள் பொருளாதார மன்றத்தில் பகிர்ந்து கொண்டதோடு சிறந்த மக்களை ஊக்கப்படுத்துவதற்கான பரிசையும் பெற்றவர். முன்பள்ளி ஆசிரியராக கடமையாற்றுகின்ற வேலை நேரத்தைத் தவிர ஏனைய நேரத்தை தோட்டச் செய்கையிலேயே செலவு செய்கின்றேன். எனது குடும்பத்திற்குத் தேவையான மரக்கறி வகைகளை எனது தோட்டத்தில் இருந்து பெற்றுக் கொள்கின்றேன். இதன் மூலம் சராசரியாக 7,000 – 10,000 வரையிலும் பணத்தினை மீதப்படுத்த முடிகிறது. இயற்கை சார்ந்த பயிரப் பாதுகாப்பினால் நஞ்சற்ற மரக்கறிகளைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. என்னிடம் மரக்கறிகளைக் கொள்வனவு செய்வோர் நஞ்சற்ற உணவினை உற்கொண்டு வருகின்றனர். இது ஒரு சமூக கரிசனையும் தான்.

பெண் தலைமைத்துவ குடும்பமாக இருந்தும் தான் யாரிடனும் பொருளாதாரத்திற்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் என கையேந்தி வாழவில்லை. எனது சுய முயற்சியினால் யாருக்கும் அடிமையாகாமல் தன்நம்பிக்கையோடு வாழ்ந்து வருகின்றேன். எனது பிள்ளைகளையும் அவ்வாறே வளர்த்து வருகின்றேன். எனது உழைப்பின் மீது மட்டுமே எனக்கு நம்பிக்கை. எனது பிள்ளைகளும் தமது கல்வி நேரம் தவிர என்னுடன் சேர்ந்து எனது முயற்சிக்காகப் பாடுகின்றார்கள். எமது வருமானத்தை நாங்களே பார்த்துக் கொள்கின்றோம். சிறிய அளவில் கோழி வளர்ப்பினையும் ஆடு வளர்ப்பினையும் செய்து வருகின்றோம். இவற்றின் எருவைக் கொண்டு விவசாயத்திற்கான பசளையாக்கிப் பயன்படுத்தி வருகின்றோம். இவற்றின் மூலமும் வருமானத்தை ஈட்ட முடிகின்றது.

போசாக்கான உணவு உண்பதற்கான உணவு அட்டவணை ஒன்றை எமது சமையல் அறையில் காட்சிப்படுத்தியிருக்கின்றேன். போசணை கூறுகளின் செலவினைக் குறைத்து போசாக்கான உணவினை உட்கொள்வதற்கு இவை உதவுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### கிளிநொச்சி நகரில் வசித்து வரும் விமலதாஸ் பத்மினி

'ரெஜியின் பொருளவை' ஊடாக எமது கிராமத்தில் சமையல் எரிவாயுவிற்காக பணத்தை செலவு செய்வதில்லை.மாற்று வழி முறைகளைப் பின்பற்றி வருகின்றோம் என எம்மோடு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். நான் கிளிநொச்சி நகரில் வசித்து வருகின்றேன்.எனது கணவர் அரச உத்தியோகஸ்தராக கடமையாற்றுகின்றார். இவருடைய வருமானம் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் விலையேற்றத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இந்நிலையில் எமது குடும்ப வாழ்வுக்குத் தேவையான செலவீனங்களை மட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கான வழிமுறைகளைத் தேடிய போதுதான் சமையலுக்காகப் பயன்படுத்தும் எரிவாயுவுக்கான செலவாக மாதாந்தம் 5180.00 ரூபாவினை சராசரியாக 28– 34 நாட்களுக்கு ஒரு தடவை எரிவாயுக்காக செலவு செய்கின்றேன். அதற்கு ஒரு மாதம் சராசரியாக 5000.00 ரூபாவீதம் ஒரு வருடத்திற்கு 60000.00 ரூபாவினை சமையல் எரிவாயு அடுப்பிற்காக செலவிடுகின்றேன்.

தற்போது நான் எரிவாயு அடுப்பிற்குப் பதிலாக மரத்தூள் அடுப்பினை பாவித்து வருகின்றேன். ஒரு உரப்பை நிறைய மரத்தூளினை எடுப்பதற்கு சராசரியாக 100 – 150 ரூபாய் மாத்திரமே செலவாகின்றது. மரத்தூள் அடுப்பினை தயார் செய்வதற்கு சற்று நேரம் பிடிக்கும், 10 – 15 நிமிடங்கள் தயார் செய்து விட்டால் சோறு, இரண்டு கறிகள் சமைப்பதற்கு இது போதுமானது. ஓர் உரப்பை மரத்தூள் எனக்கு 25 நாட்களுக்குப் போதுமானது. எனது குடும்பத்திற்காக



இப்போது நான் 5000 ரூபாவினை ஒரு மாதத்திற்கு மீதப்படுத்துகின்றேன். சராரியாக ஆண்டுக்கு 60000.00 ரூபா எமது அடிப்படை வீட்டுத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு கணிசமான பங்கினை இம்மாற்றம் உதவி செய்கின்றது.

"ரெஜியின் பொருளவை" கிராமிய மட்ட மக்கள் கலந்துரையாடலில் தற்போது நாட்டில் முட்டைக்கான தட்டுப்பாடு நிலவுகின்ற காலகட்டத்தில் அக்கரயான் கெங்காதரன் குடியிருப்பிலுள்ள மதியழகன் தர்சினி அது குறித்த கருத்துக்களை எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

### நான் மதியழகன் தர்யழகன் தர்சினி

எங்கள் வீட்டில் முட்டை இல்லை என்று நாள் இருந்ததில்லை. மிக நீண்ட காலமாக கோழி வளர்ப்பினை செய்து வருகின்றேன். இது எனக்கு விருப்பமானதொன்றுதான். எனக்கு 35 வயதாகின்றது. நான் இன்று வரை முட்டை வாங்குவதற்கு கடைக்குச் சென்றதில்லை. எங்கள் வீட்டில் வளர்க்கும் கோழிகளில் இருந்தே எமது தேவைக்கான முட்டைகளைப் பெறுகின்றோம். மேலதிகமானவற்றை அயலவர்களுக்கு விற்று வருகின்றோம். கடந்த கால சில மாதங்களுக்கு முன் ஒரு முட்டையின் விலை 70 ரூபா வரைக்கும் விலை உயர்ந்து காணப்பட்டது. சராசரியாக 10 கோழிகளை வளர்க்கின்ற ஒருவர் 10 முட்டைகளை விற்றால் 700 ரூபா பணத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். சாதாரணமாக குடும்பம் ஒன்றின் வாழ்க்கைச் செலவீனத்தை ஈடு செய்து கொள்ள முடியும். இக்காலப்பகுதியில் நல்ல வருமானத்தை ஈட்ட முடிந்தது.

அதேவேளை இறைச்சிகான புறொய்லர் கோழிகளையும் வளர்த்து வருகின்றேன். இவற்றின் மூலமும் கணிசமானளவு வருமானத்தை ஈட்ட முடிகின்றது. எனது கணவர் அரச உத்தியோகம் செய்பவர். இவரது வருமானத்திற்கு ஏற்ற வகையில் வீட்டில் இருந்தவாறே எனது முயற்சியால் சராசரியான வருமானத்தை ஈட்ட முடிகின்றது.

அப்படியாயின் கோழித் தீன்களின் விலையேற்றம் அதிகரித்துள்ளமையால் கோழி வளர்ப்பிற்கு தடையாக அமையவில்லையா?

உண்மைதான்,தொகையாக கோழி வளர்ப்பவர்ளுக்கு இடர்பாடாகத் தான் அமைந்துள்ளது. இருந்தும் சாதாரணமாக 510 கோழிகளை வளர்க்கும் ஒருவருக்கு தீவன விலையேற்றம் பெரிய ஒரு பாதிப்பினை ஏற்படுத்தாது.அவை சுற்றாடலில் காணப்படும் பூச்சி,புழுக்களையும் கறையான் போன்றவற்றை உண்டே உயிர் வாழக் கூடியன. இவற்றுடன் வீட்டுக் கழிவுகள்,எஞ்சிய உணவுக் கழிவுகள் ஆகியவற்றுக்கு போதுமானதாகும்.தீவன விலையேற்றம் வீட்டுத் தேவைக் கருதி கோழி வளர்ப்பில் ஈடுபடும் எவருக்கும் பாதிப்பினை ஏற்படுத்தப் போவதில்லை.

### 'ரெஜியின் பொருளவையின்' முகுந்தன் அற்றனிற்றா

எனது கணவர் மத போதகராகக் கடமையாற்றி வருகிறார். "ரெஜியின் பொருளவையின்" கிராமியக் கலந்துரையாடல் என்ற வகையில் கொங்கராயன் குடியிருப்பு அக்கராயனில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலின் போது எமது வாழ்க்கை முறையில் பயன்படுத்தப்படும் "போலி உணவு" தொடர்பில் தெளிவுபடுத்தியிருந்தேன்.

எமது வாழ்கைக்கு தேவையான போசாக்கு மற்றும் ஊட்டச் சத்துகள் அடங்கிய கீரை வகைகளை நாம் வாழும் சூழலிலேயே தாராளமாகக் காணப்படுகின்றன. இருந்தும் இவற்றைத் தவிர்த்து வருகின்றோம். கீரை என்றதும் காசு கொடுத்து கடையில் வாங்குதல் எனும் முறைக்கு பழக்கப்பட்டு விட்டோம். எனது குடும்பத்திற்கு தேவையான கீரையை காசு கொடுத்து வாங்குவதில்லை. கீரை சமைக்க வேண்டுமாக இருந்தால் எனது வீட்டுச் சூழலில் முளைத்துள்ள முருங்கக் கீரை. வேலியில் முளைத்துள்ள பூவரசம் தளிர், முள் முருங்கக் கீரை, முசுட்டை முடக்கத்தான் இவற்றுடன் பூசணிக் கீரையின் தளிர், கொடி தோடை தளிர் (பெசன் புரூட்) மரவெள்ளி இலை என இவற்றைப் பயன்படுத்தி சுவையான கீரையை உண்டு வருகின்றோம். கடையில் கொள்வனவு செய்வதென்றால் கிழமைக்கு 300 ரூபாய் தேவை. ஒரு மாதத்திற்கு 1,200 ரூபாய் தேவைப்படுகிறது. சந்தையில் இரசாயன பூச்சிக் கொல்லிகள் விசிறப்படாமல் கீரைகள் சந்தைக்கு வருவதில்லை. பணத்தைக் கொடுத்து நோயாளி ஆவதை விட இயற்கை மருந்தாக உணவில் சேர்க்க முனைவது சிறப்பானது அல்லவா என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### "ரெஜியின் பொருளவையின்"கிளிநொச்சி கல்–விக்கரசி கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போது...

எனது பெயர் ரமேஸ் கல்விக்கரசி. நான் கிளிநொச்சியில் நகரப் பகுதியில் வசித்து வருகின்றேன். எனது கணவரின் வருமானத்தில் மாத்திரமே எனது வாழ்க்கை செலவு செல்கின்றது. இருந்தும் சிறியளவு வீட்டுத் தோட்டத்தைச் செய்து வருகின்றேன். சிறியளவு கொல்லைப்புற கோழி வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளேன்.

எனது சமையற் பாத்திரங்கள் உட்பட ஏனைய பாத்திரங்கள் அனைத்தையும் கழுவுதற்கு சவர்க்காரமோ இரசாயன திரவியங்களோ பாவிப்பதில்லை. இதனை அம்மாவிடம் இருந்து பார்த்து பழகினேன். அம்மா விறகின் மூலம் சமைப்பவர். அதில் வரும் அடுப்புச் சாம்பலை ஒரு தகர டப்பாவில் போடுவார். பின் தேங்காய்தும்பினை பயன்படுத்தித் தான் பாத்திரங்களைக் கழுவுவார். சட்டி பானைகள் என அனைத்துப் பாத்திரங்களையும் இவற்றின் மூலமே கழுவுவார். எண்ணெய் படிந்த பாத்திரங்கள் என்றால் சாம்பலுடன் சற்று மணலையும் சேர்த்து தேய்த்து கழுவுவார். பாத்திரங்கள் பளபளக்கும். இதனைத் நானும் கடைபித்து வருகின்றேன். "மக்கள் பொருளாதார மன்றத்தின்" கிராமிய மக்கள் சந்திப்பின் போதும் இரசாயனங்கள், சவர்க்காரம், திரவியங்கள் பாவிப்பதால் உடல்நலக் கேடுகளும் ஏற்படும். ஒரு கிழமைக்கு சராசரியாக 100 ரூபா வீதம் மாதாந்தம் 400 ரூபாவோடு ஆண்டு ஒன்றிற்கு 4,800 ரூபாவை எனது வாழ்க்கை முறை ஊடாக மீதப்படுத்துகின்றேன். இதை விட உடல் நலத்தினையும் பாதுகாக்கின்றேன். தற்போதைய கால கட்டத்தில் நோய்களுக்கான மருந்து செலவுகளும் அதிகமாகும்.இயற்கையோடு இணைந்து இயல்பாக வாழ்வது எவ்வளவு முக்கியமானது என்பதை விளங்கிக் கொள்ள நல்ல வாய்ப்புக்கள் உள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட குடும்பப் பெண்களின் வாழ்வியல் அனுபவங்கள் இப்பிரதேசத்தில் மட்டுமல்ல இந் நாட்டில் வாழும் அனைத்து குடும்பங்களின் அனுபவங்களையும் விவரித்து நிற்கின்றது. நுகர்வு மையப் பண்பாட்டு ஆக்கிரமிப்பை தவிர்த்து வாழும் குடும்பப் பெண்களாக சுய பொருளாதாரத்தின் மீது நம்பிக்கை கொண்டு நிமிர்ந்து நிற்கும் விருட்சங்களாக மாற்றம் அடைதல் நாட்டின் பொருளாதார விருத்திற்கான நிலைபேறுடைய செயற்பாடாகும்.



**இக்பால் அலி...**





Capitaltrust
Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

## Selected stocks trading at significantly low valuations…

**Daily Market Watch**
09th May 2023

### Market Commentary

It was a mixed performance for the Stock Market yesterday with the All Share Price Index declining modestly by 0.13% to close at 8,914.74, while the S&P Srilanka 20 Index rose by 0.54% to end the session at 2,607.40. Gainers included Sampath Bank, Commercial Bank and Expolanka Holdings which rose by 1.38%, 1.42% and 1.76% respectively, while HNB and Vallibel One declined by 2.34% and 1.72%. Turnover continued to remain low at LKR 668 mn, with trading in Expolanka Holdings accounting for 18% of the total. While the performance of the stock market has been relatively sluggish over the past few weeks, selected stocks are trading at significantly low valuations, presenting strong long term value at current bargain prices.

### Top Gainers and Loosers




### Market Performance

| | 09.05.2023 | 08.05.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 8,914.7 | 8,926.6 | -0.13 |
| S&P SL 20 Index | 2,604.5 | 2,593.4 | 0.43 |
| Turnover (LKR mn) | 667.8 | 885.2 | -24.6 |
| Foreign Purchases (LKR mn) | 39.9 | 20.7 | 92.8 |
| Foreign Sales (LKR mn) | 10.4 | 22.5 | -54.0 |
| Market Cap (LKR bn) | 3,785.1 | 3,781.8 | 0.1 |
| Market Cap (US$ bn) | 11.9 | 11.9 | 0.1 |
| Traded Companies | 258 | 245 | 5.3 |
| Market PER (x) | 4.9 | 4.9 | 0.0 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | 0.0 |
| Dividend Yield (%) | 4.2 | 4.2 | 0.0 |

### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI




### Turnover Breakdown




### Key Rates

| | 09.05.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 20.84% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.80% |
| Treasury Bill Rate (364 Days) | 23.14% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 35.50% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS

Exterminators PLC (EXT) - LKR 0.40. XD date – 17.05.2023.

Union Chemicals Lanka PLC (UCAR) - LKR 17.00. XD date – 13.06.2023.

Malwatte Valley Plantation PLC (MAL) - LKR 0.16. XD date – 26.06.2023.

PGP Glass Ceylon PLC (GLAS) - LKR 1.66. XD date – 20.07.2023.

Sri Lanka Telecom PLC (SLTL) - LKR 0.25. XD date – 12.05.2023.

Ceylinco Insurance PLC (CINS) - LKR 45.00. XD date – 29.05.2023.

Company PLC (CTC) - LKR 20.30. XD date – 29.05.2023.

Nestle Lanka PLC (NEST) - LKR 75 .00. XD date – 06.06.2023.

SCRIP DIVIDENDS

National Development Bank PLC (NDB) - 1 share for 17.9160004596 Shares.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

# வட மாகாண உள்ளூராட்சி மன்றங்கள் முறைப்பாடுகள் இருப்பின் தெரிவிக்க தொலைபேசி இலக்கம்

வட மாகாணத்திற்குட்பட்ட உள்ளுராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய ஏதேனும் முறைப்பாடுகள் காணப்படின், வடமாகாண உள்ளுராட்சி திணைக்களத்தின் Hot Line இலக்கமான 0707213728 என்ற இலக்கத்திற்கு தொலைபேசி ஊடாகவும், Whatsapp, Viber மூலமும் 24 x 7 மணி நேரமும் பொது மக்கள் தமது முறைப்பாடுகளை தெரிவித்துக் கொள்ள முடியும் என வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் தினகரனுக்குத் தெரிவித்துள்ளார்.

## ஆப்கானிஸ்தானில்...

120 கிலோமீட்டர் ஆழத்தில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதுவரை உயிரிழப்புக்கள் குறித்து எந்த தகவல்களும் இல்லை .

முன்னதாக கடந்த (3.05.2023) அன்று, ரிச்டர் அளவுகோலில் 5.2 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஆப்கானிஸ்தானை உலுக்கியதாக நில அதிர்வுக்கான தேசிய மையம் மேலும் தெரிவித்துள்ளது.

## வான் – கார் நேருக்கு...

பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தில் வேனில் பயணித்த மூன்று பெண்கள் உட்பட ஆறு பேரும் காரில் பயணித்த தம்பதிகளுமாக, எட்டுப் பேர் வாரியபொல மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## அநுராதபுரம் சிறைக்குள் தமிழ்...

(14) அநுராதபுரம் பிரதான நீதிவான் நீதிமன்றில் இராஜாங்க அமைச்சரை ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளனர். அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, அங்கிருந்த தமிழக் கைதி ஒருவக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டு, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட போதே, பிரதான நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

## தாமரைக் கோபுரத்தை...

திகதிகளில் 20,883 உள்ளூர் சுற்றுலா பயணிகளும் 163 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் தாமரை கோபுரத்தை பார்வையிட வந்ததாக தாமரை கோபுர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இவர்களில், கடந்த 06 ஆம் திகதி மட்டும் 12,204 உள்ளூர் சுற்றுலா பயணிகளும், 76 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தந்திருந்தனர்.

அத்துடன், தாமரை கோபுரம் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்ட பின்னர், அதிகளவான பார்வையாளர்கள் வருகை தந்த நாளாகவும் அன்றைய தினம் பதிவாகியமை விசேட அம்சமாகும்.

## கோதுமை மாவின் விலையில்...

மாவின் விலை 10 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

"இது குறித்து மிகவும் தவறான செய்தி உலவுவதாக

மா உற்பத்தி நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. நான், சம்பந்தப்பட்ட இரு நிறுவனங்களின் முக்கிய அதிகாரிகளை அழைத்தேன். மாவின் விலை ஐந்து ரூபா கூட அதிகரிக்கப்படவில்லை என்பதை பொறுப்புடன் அறிவிக்குமாறு அவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டனர்.

## தாதியர்களுக்காக புதிதாக...

கொண்ட குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு, இலங்கை தேசிய தாதியர் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான கொள்கையளவிலான அனுமதியை பெற்றுக் கொடுக்கவும் அதற்கான சட்டவரைவை தயாரிப்பதற்கும் பதில் கல்வி அமைச்சர் என்ற ரீதியில் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் யோசனை முன்வைத்திருந்தார்.இந்த யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

## தர்ஹா நகர் ஜமாஅத் கவுன்ஸில்...

முன்தினம் இரவு (08) தர்ஹா நகர் இல்லத்தில் காலமானார்.

மர்ஹூம் கலீபதுல் குலபா மௌலவி அல்ஹாஜ் ஸெய்யித் அஹ்மத் ஆலிம் பஹ்ஜியின் புதல்வரான அன்னார், தான், பிறந்த தர்ஹா நகர் ஊரின் வளர்ச்சிக்காக ஓர் ஆலிமாக இருந்து பல நற்பணிகளை முன்னெடுத்ததோடு மார்க்கக் கல்வி மற்றும் ஊரின் பொதுநல பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அளப்பரிய சேவை செய்தவர்.

அன்னாரின் ஜனாஸா நேற்று (09) நிவ்ரோட் பத்தாஹ் ஹாஜியார் மாவத்தையிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து பி.பகல் 2.00 மணிக்கு தர்ஹா நகர் இப்றாஹீமிய்யா ஸாவியாவில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது.பின்னர், அஸர் தொழுகையை தொடர்ந்து தர்ஹா நகர் தெருவுப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா தொழுகையை புதிய கலீபதுல் குலபா மொஹமட் ஸுஹ்ர் (பாரி) நடாத்தினார். ஜம்இய்யதுல் உலமா களுத்துறை மாவட்ட தலைவர் அப்துர் ரஹ்மான் பஹ்ஜி, மின்னதுல் பாஸியா அரபுக் கல்லூரி அதிபர் இஸ்திஹார் (பாரி) , ஜமாஅத் கவுன்ஸில் தலைவர் நிஸாம் மாஷ்டர் ஆகியோர் நினைவு சொற்பொழிவாற்றினர். ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், பல தரீக்காக்களின் முக்கிய பிரமுகர்கள் உட்பட அரசியல் பிரமுகர்கள், புத்திஜீவிகள், சகோதர இனத்தவர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி ஆணைக்குழு அமைத்து...

நியமிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வன்முறைகள் இடம்பெற்று ஓராண்டு நிறைவடைந்துள்ளதையடுத்து பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் உள்ளிட்ட ஏனைய மக்கள் பிரதிநிதிகளுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக இவ்வாறு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்கிழமை (09) நடைபெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்தாண்டு இதே நாள் உலக வரலாற்றில் ஜனநாயகத்துக்கு கரும்புள்ளியை ஏற்படுத்திய நாளாகும். அரசியலமைப்பு சபை, நிறைவேற்றதிகாரம், நீதிமன்றம் ஆகிய மூன்றும் ஜனநாயக நாட்டில் பிரதான அம்சங்களாகும்.

இவற்றுக்கு அப்பால் கடந்த ஆண்டு மே 09ஆம் திகதி திட்டமிட்ட வகையில் நாட்டில் வன்முறைகள் இடம்பெற்றன. இதன் விளைவாக பாராளுமன்ற உறுப்பினரொருவர் கொல்லப்பட்டதோடு மாத்திரமின்றி, 12 மணி நேரத்துக்குள் 72 பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அது மாத்திரமின்றி பிரதேசசபைகள் உள்ளிட்டவற்றின் 800 மக்கள் பிரதிநிதிகளின் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

## முஸ்லிம்கள் எதிர்நோக்கும் சவால்கள்...

அழைப்பதாக அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் அழைப்பு விடுத்துள்ளார்.

முஸ்லிம் சமூகத்தின் சமகால சவால்களை தீர்த்துவைக்கும் பொதுவான வரைபை தயாரிக்கும் தருணம் வந்துள்ளது.இனியும், தனித்தனியாகச் செயற்பட்டு சமூக உரிமைகளை வெல்ல முடியாதென்பதே நிதர்சனமென்றும் அமைச்சர் நஸீர்அஹமட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சிறுபான்மை சமூகங்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி முனைப்புடன் செயற்படுவதை நான் அறிவேன்.

எனவே, இழக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை மீளப்பெறவும், இதனுடன் தொடர்புடைய ஏனைய பிரச்சினைகள் குறித்தும் பொதுவான வரைபை தயாரிக்க வேண்டியுள்ளது.வடக்கில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் பறிபோன காணிகள் மற்றும் கிழக்கில் திட்டமிட்டு விழுங்கப்பட்ட முஸ்லிம்களின் பூர்வீக நிலங்களைப் பெற வேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது. இதற்கு அரசியல் தலைமையென்ற ரீதியில் நாம் பதில் சொல்லியே ஆக வேண்டும் .

உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 27 சத வீதமான முஸ்லிம்கள் வாழ்கின்னறனர். இம்மாவட்டத்தில் மொத்தமாகவுள்ள 14 பிரதேச செயலகங்கள் பிரிவில், நான்கு பிரதேச செயலகங்களிலே முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இச்செயலகங்களில் வாழும் முஸ்லிம்களுக்கு,1.3 வீதமே காணிகளே உள்ளன. இவையும் திணிக்கப்பட்டே இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.இதே நிலை தான்,அம்பாறை, திருமலை உட்பட வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் நிலவுகிறது.

இது தவிர, எல்லை நிர்ணய அறிக்கைகளிலும் சில சந்தேகங்கள், பாரிய ஆபத்துக்கள் உள்ளன.

முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் அல்லது அவர்களின் பெரும்பான்மை பலத்தை சிதைக்கும் வகையிலேயே இந்த அறிக்கை உள்ளது.புதிய தேர்தல் முறையிலும் முஸ்லீம் சமூகம் பாதிக்கப்படாதவாறு நாம், பணியாற்ற வேண்டியுள்ளது.

எனவேதான், முஸ்லிம் சமூகத்தின் இவ்வாறான சமகால சவால்கள் தொடர்பில் சமூகப் பிரதிநிதிகளிடம் ஒருமித்த கருத்து நிலவுவது அவசியம். இக்கருத்தொற்றுமையுடனும் போதிய ஆவணங்களுடனும் முஸ்லிம் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும். இதற்காக,சகல முஸ்லிம் தலைமைகளும் எம்பிக்களும் தங்களது அரசியல் பேதங்களைப் புறந்தள்ளி ஒன்றுபடுமாறு அழைக்கிறேன். ஒற்றுமையில் தான், பொது வரைபை தயாரிக்கலாம். இந்த வரைபினால், சகோதர சமூகங்களையும் புரிந்துணர்வுக்கு கொண்டு வர முடியும். ஒரே தாய் மொழியினராகியதமிழரும்,முஸ்லிம்களும் தொடர்ந்தும் பிணக்குகளுக்குள் சிக்கியிருப்பது சிறுபான்மைச் சமூகங்களை ஈடேற்றாது என்பதையே வரலாறு உணர்த்தியிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## 92,000 இலங்கையர்...

மொத்தம் 106 அகதி முகாம்கள் இயங்கி வருகின்றன. தமிழக அகதி முகாம்களில் தற்போது 19,046 குடும்பங் களைச் சேர்ந்த 58,435 நபர்கள் தங்கியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது . சுமார் 10,000 குடும்பங்களைச் சேர்ந்த 34,000 இலங்கையர் இந்தியாவில் வேறு இடங்களில் வசிக்கின்றனர். இவர்கள் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் பெருமளவான இலங்கையர் நாடு திரும்பியுள்ளனர். இலங்கைக்கு திரும்ப விரும்பும் நபர்களுக்கு ஆதரவளிக்க அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது, வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அகதிகளின் மீள்குடியேற்றம் தொடர்பான தமது பரிந்துரைகள் மற்றும் தேவைகளை சமர்ப்பிக்க முடியும். தமிழகத்தில் பல தசாப்தங்களாக எஞ்சியுள்ள இலங்கையரை பாதுகாப்பாக மீள் குடியேற்றுவதற்கு தற்போதைய நிர்வாகம் அனைத்து தரப்பினருடனும் இணைந்து செயற்படத் தயாராக உள்ளது.

## காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தில்...

பிரதான சந்தேக நபர், காலிமுகத்திடல் போராட்டத்தின் பிரதான செயற்பாட்டாளர்களில் ஒருவராக செயல்பட்டவர் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஏற்றுமதி அபிவிருத்தி சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

காலிமுகத்திடல் போராட்டத்தில் பல்வேறுபட்ட நபர்கள் செயற்பட்டனர்.அங்கு கூடாரங்களை அமைத்து அவற்றுக்கு பல பெயரிட்டு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எனினும், அவர்கள் எமது எதிரியாக இருந்தாலும் கூட அவர்களுக்கு எந்த பாதிப்பு நடந்தாலும் அது தொடர்பாக மகிழ்ச்சியடையக் கூடாது. நமது பௌத்த நாட்டில் இயற்கையாக சில சம்பவங்கள் நடப்பதை அவதானிக்க முடிகிறது.

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் பந்தங்கள் ஏந்தி மந்திரம் ஓதி செயற்பட்ட பூசாரி, மின்னல் தாக்குதலுக்குள்ளாகி இறந்துள்ளார்.

அதேபோன்று அங்கிருந்த நூலகத்திற்கு பொறுப்பாக இருந்தவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

வெசாக்கின் போது கறுப்பு நிறத்தில் வெசாக் கூடு செய்தவர், இப்போது பைத்தியக்கார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த போராட்டத்தில் முக்கியமான ஒருவர் தெஹிவளை பகுதியில் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார். இன்னுமொருவர் நீரில் மூழ்கி இறந்துள்ளார்.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷவுக்கு மரண போஸ்டர் அச்சிட்டவர், லங்கா வைத்தியசாலையில் மரணித்துள்ளார். இதுதான் கர்ம வினையால் கிடைப்பவை.

அதேவேளை, ஜனாதிபதியின் கொடியை திருடிச் சென்ற தொழிற்சங்க பிரதானி ஆட்டோ விபத்தில் தமது கால் ஒன்றை இழந்துள்ளார்.

அத்துகோரள எம்.பியின் கொலையுடன் தொடர்புடைய ஒருவர் சிறையில் உயிரிழந்துள்ளார். இவை இந்த ஒரு வருடத்திற்குள் நடந்தவை. கர்ம வினையின் பலன்களை இப்போது காணக்கூடியதாக உள்ளது.

## "அஸ்வெசும" நலன்புரி நன்மைகள்...

பாதிக்கப்படக்கூடிய, வறிய மற்றும் மிகவும் வறுமையான குடும்பங்களென 04 பிரிவுகளின் கீழ் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. விசேட தேவையுடையோர், முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் ஆகியோருக்கும் "அஸ்வெசும" திட்டத்தின் கீழ் நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய தற்காலிக நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருக்கும் 4,00,000 பேருக்கான 2,500.00 ரூபா மாதாந்த கொடுப்பனவு 2023 டிசம்பர் 31 வரையிலும் வழங்கப்படும். மேலும், பாதிக்கப்படக் கூடிய 4,00,000 பேருக்கான 5,000.00 ரூபா கொடுப்பனவு 2024 ஜூலை 31 வரையிலும் வழங்கப்படவுள்ளது. மேலும் வறியோரென அறியப்பட்ட பயனாளிகள் 800,000 பேருக்கென 8,500.00 ரூபா கொடுப்பனவும் மிக வறுமையானவர்களுக்காக மாதாந்தம் 15,000.00 கொடுப்பனவும் 2023 ஜூலை 01 முதல் மூன்று வருட காலத்துக்கு வழங்கப்படவுள்ளன.

தற்போது நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளும்72,000 மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்தம் 5,000 ரூபா வீதமும், சிறுநீரக பாதிப்புக்கான நிவாரணங்களை பெறும் 39,150 பேருக்கு 5,000 ரூபா வீதமும் முதியவர்களுக்கான கொடுப்பனவுகளை பெறும் 4,16,667 பேருக்கு 2,000 ரூபா என்ற அடிப்படையிலும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

## வடக்கு, கிழக்கு எம்.பிக்களை...

ரணில் இணக்கம் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவுடன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த சந்திப்பின்போதே ஜனாதிபதி தரப்பில் இந்த இணக்கம் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மன்னாரில் பாடசாலைகளுக்கு...

சிறுவர்களைக் கடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டதாகவும் தெரிய வருகிறது.உணவு பொருட்களை கொடுத்தே இச்சிறுவர்களை கடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இவ்விடயம் மாவட்ட அரசாங்க அதிபர், வலயக்கல்வி பணிப்பாளர், மன்னார் பொலிஸார், இராணுவத்தினரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து நேற்று (09) மன்னாரிலுள்ள பாடசாலைகளுக்கு விசேட இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.மேலும், பொலிஸாரும் மேலதிக பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

## அ.தி.மு.க குழுவினருடன் ...

மரியாதை நிமித்தம் நடைபெற்ற இச்சந்திப்பில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், இலங்கை இந்திய சமுதாய பேரவையின் சார்பில் சிவராமன் மற்றும் காந்தி ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். எம்.ஜி.ஆர். அறக்கட்டளை மூலம் முன்னெடுக்கப்படும் பணிகள் தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் எடுத்துரைத்த அவர்கள், இலங்கை மக்களுக்கும் சேவை செய்யத் தயாராக இருப்பதாக தமது விருப்பத்தை வெளியிட்டனர்.

## அமரகீர்த்திக்கு சபையில்...

பூர்த்தியாகியுள்ளதையிட்டு நேற்று பாராளுமன்றத்தில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவின் கோரிக்கைக்கமைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, இதற்கு இணக்கம் தெரிவித்தார். இதனையடுத்து, ஒரு நிமிடம் இந்த மௌன அஞ்சலி இடம்பெற்றது.கடந்த 2022 மே 09 ஆம் திகதி மாலை அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களால், நிட்டம்புவவில் வைத்து அமரகீர்த்தி சுட்டுக் கொல்லப்பட்டார்.

## நீதிமன்றில் ஆஜராகிய...

குறித்து அவதூறாக பேசியது உட்பட பல்வேறு வழக்குகள் இம்ரான்கான் மீது பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

சில மாதங்களுக்கு முன்பு, இம்ரான் கானை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்ட போது, நாடு முழுவதும் வெடித்த கலவரத்தை தொடர்ந்து அவரது கைது நிறுத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில், இஸ்லாமாபாத் உயர்நீதிமன்ற வளாகத்தில் நேற்று இம்ரான் கானை பாகிஸ்தான் ரேஞ்சர்ஸ் படையினர் கைது செய்து பொலிஸாரின் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். இம்ரான் கானை கைது செய்ய முயன்றபோது தடுக்க முயன்ற அவரது வழக்கறிஞரும் தாக்கப்பட்டார்.

## அனர்த்தம், கொடுக்கல்... (03ஆம் பக்கத் தொடர்)

ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்யும் 15 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட விசேட குழு வை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்த 21 பாராளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனுவை இந்த எம்பிக்கள் சபாநாயகரிடம் கையளித்துள்ளனர்.

## கடும் நடவடிக்கை... (03ஆம் பக்கத் தொடர்)

இதுமட்டுமன்றி, ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் வீடுகளும் தீக்கிரையாகியிருக்கும் என்றும் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நூற்றுக்கணக்கான அரசியல்வாதிகளின் சொத்துக்கள் சேதமடைந்ததைத் தொடர்ந்து அரசாங்கம் இராணுவத்தை களமிறக்காமல் இருந்திருந்தால் மே 10 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தி அரசியல்வாதிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் சொத்துக்களும் தீக்கிரையாக்கப்பட்டிருக்கும் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

## மே 09 சம்பவத்தை... (03ஆம் பக்கத் தொடர்)

பிறப்பித்துள்ளார். என்.எஸ்.ஏ. சுற்றுவட்டத்திலிருந்து காலிமுகத்திடல் சுற்றுவட்டம் வரையிலான பிரதான வீதிகளில் போராட்டக்காரர்கள் நடமாடுவதைத் தடைசெய்த நீதவான், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்க வேண்டாமென்றும் வன்முறையில் ஈடுபட வேண்டாமென்றும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு உத்தரவிட்டார்.

கோட்டை கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை கருத்திற்கொண்டு, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கிருலப்பனை, கொள்ளுப்பிட்டி, கோட்டை பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பிரிவினருக்கு இவ்வாறு, ஆர்ப்பாட்டத்துக்கு தயாராவதாக தகவல்கள் கிடைத்தன.

இதையடுத்தே இதற்கு பொலிஸார் தடை உத்தரவுகளை கோரியிருந்தனர். இதனாலேயே நீதிமன்றம் இந்த உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. எனினும்,

அமைதியான முறையில் போராட்டங்களை நடத்தலாமெனவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## ஓமான் முதலீட்டாளர் மீதான... (03ஆம் பக்கத் தொடர்)

ஆனால், கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தொழிற்சாலையின் வெளிநாட்டு முதலீடடாளர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது தொடர்பில் அவருக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

அதனால் அந்த முதலீட்டாளர் நாட்டை விட்டு வெளியேற நடவடிக்கை எடுத்து வருகிறார். முதலீட்டாளர் நாட்டைவிட்டுச் சென்றால், அங்கு பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்கள் நடுத்தெருவில் விடப்படும். அதனால், அவருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டார். அதனைத் தொடர்ந்து சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே எம்பி அது தொடர்பில் தெரிவிக்கையில், முதலீட்டாளர்களை நாட்டுக்கு கொண்டுவர முயற்சித்துவரும் இவ்வேளையில், இருக்கும் முதலீட்டாளர்களை அச்சுறுத்தி நாட்டைவிட்டு வெள்யேற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதனால் கட்டான பிரதேசத்தில் தொழிற்சாலை அமைத்திருக்கும் ஓமான் முதலீட்டாளருக்கு நீதியை பெற்றுக்கொடுத்து, நாடு தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## மத்திய வங்கி... (03ஆம் பக்கத் தொடர்)

இதற்கான பரிந்துரைகள் உச்ச நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க திருத்தங்களை முன்வைக்கவும் அதனோடு சம்பந்தப்பட்ட சரத்துக்கள் மற்றும் சட்ட மூலம் தொடர்பில் கலந்துரையாடவும் முடியும். உரிய நடைமுறைகளைப் பின்பற்றி, இவ்வாரம் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில்லை என்ற தீர்மானத்தை ஏற்கனவே ஜனாதிபதியும் தெரிவித்துள்ளார். ஏற்கனவே, சில இணக்கப்பாடுகளுக்கு நாம் வந்துள்ளோம்.

உரிய தினத்தை மாற்றம் செய்வதில் எதிர்க்கட்சித் தலைவருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது.

பாராளுமன்றத்துடன் சம்பந்தப்பட்ட பல்வேறு தெரிவுக்குழுக்கள் உள்ளன.

அந்த வகையில் மேற்படி ஆலோசனைக் குழுவில் கலந்து கொண்டு கலந்துரையாடும் வாய்ப்பை இழந்துவிட வேண்டாமென எதிர்க்கட்சியிடம் கேட்டுக்கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்தை பிரயோசனப்படுத்திக் கொள்ளுங்கள்.

அவ்வாறு அதை தவற விட்டு பின்னர் சபையில் வந்து அது தொடர்பில் தமக்குத் தெரியாது என்று தெரிவிக்கக் கூடாது. உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள வழக்கு தீர்ப்பு மட்டுமன்றி பாராளுமன்றத்திற்குள்ள நிதி தொடர்பான அதிகாரம் தொடர்பிலும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியும். எவ்வாறெனினும் இந்த வாரத்தில் நாம் அதனை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள மாட்டோம் என்றார்.

தினகரன் Business

# உலக கைகழுவுதல் தினத்தை முன்னிட்டு Dettol இன் புதிய ஆரோக்கிய திட்டங்கள்

ஒரு நூற்றாண்டு காலமாக Dettol மனித ஆரோக்கியத்தை மேம்படுத்தி வரும் வர்த்தக நாமமாகும். மே 5 ஆம் திகதி உலக கை கழுவுதல் தினத்தை முன்னிட்டு இலங்கையில் பல புதிய திட்டங்களின் மூலம் நல்ல பாதுகாப்பான சுகாதாரம் மற்றும் சுகாதார நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு தான் அர்ப்பணிப்புடன் இருப்பதாக அறிவித்துள்ளது.

ஆரோக்கியமான தேசத்தை உருவாக்குவதற்கான Dettol இன் அர்ப்பணிப்பின் அடிப்படையில், இந்த புதிய வேலைத்திட்டமானது இலங்கை சமூகத்தினரிடையே முறையான தனிப்பட்ட மற்றும் வீட்டு சுகாதாரப் பழக்கவழக்கங்களை ஊக்குவிப்பதையும் பராமரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

Dettol 1962 ஆம் ஆண்டு முதல் நம்பிக்கை, செயல்திறன் மற்றும் கல்வியின் அடிப்படையில் அதன் நற்பெயரைப் பதிய வைத்து வருகிறது.

Dettol இலங்கையில் புதிய தாய்மார்களுக்கான சிறந்த விழிப்புணர்வு மற்றும் கல்வித் திட்டங்கள், பாடசாலைகளில் கை கழுவும் திட்டங்கள் மற்றும் COVID19 நிவாரண முயற்சிகள் உட்பட பல சுகாதார முயற்சிகளைத் மேற்கொண்டு வருகிறது. Dettole வர்த்தக நாமம் பொதுமக்களின் சுகாதார உள்கட்டமைப்புக்கு பங்களிக்கிறது, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து, பொது இடங்கள் கிருமி நீக்கம் செய்யப்படுவதை உறுதிசெய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, அதே வேளையில், கோவிட் வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு, சரியான கை சுத்தம் குறித்து பொது மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது,

இலங்கை சமூகத்தினரிடையே சிறந்த சுகாதார நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக Dettol இந்த ஆண்டு தொடர்ச்சியான செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. எதிர்காலத்தில், மகப்பேறு கிளினிக்குகள், பாடசாலை செயல்பாடுகள் மற்றும் பேரிடர் நிர்வகிப்பு நடவடிக்கைகள் போன்ற விடயங்களிலுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

'இலங்கையில் கைகளில் விஷக் கிருமிகளை நீக்குதல்' என்ற பகுதியின் கீழ் இலங்கையில் சிறந்த சுகாதார நடைமுறைகளை மேம்படுத்த Dettol உறுதிபூண்டுள்ளது.




விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் புதிய கை கழுவுதல் பிரசாரங்களைத் தொடங்குதல் ஆகியவை இந்த இலக்கை அடைய முக்கியமான படிகள். இவ்வாறான வேலைத்திட்டங்கள் மூலம் ஆரோக்கியமான சிறந்த இலங்கையை உருவாக்க முடியும்.

60 ஆண்டுகளுக்கும் மேலாக, Reckitt ஆனது அனைத்து இலங்கையர்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக இருந்து வருகிறது,

நுகர்வோர் சுகாதாரத் துறையிலும் வீட்டிற்கும் பலவிதமான தீர்வுகளை வழங்குவதன் மூலம் நாடு முழுவதும் உள்ள மக்களின் சுகாதாரம், ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்துகிறது.

சலவை இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி;

# இன்வெர்ட்டர், மோட்டார்கள், கம்ப்ரசர்களுக்கு சாம்சங் வழங்கும் 20 ஆண்டு உத்தரவாதம்




இந்த ஆண்டின் People's Youth Choice Brand விருதை வென்ற Samsung, தனது சலவை இயந்திரங்களில் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் இன்வெர்ட்டர் மோட்டார் மற்றும் அதன் குளிர்சாதனப் பெட்டிகளில் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் இன்வெர்ட்டர் கம்ப்ரஸருக்கு முதல் முறையாக 20 ஆண்டு உத்தரவாதத்தை அறிமுகப்படுத்தி புதிய மைல்கல்லை ஏற்படுத்தியுள்ளது.

Samsung தற்போது சந்தையில் 20 ஆண்டு நீட்டிக்கப்பட்ட உத்தரவாதத்தை வழங்கும் ஒரே நுகர்வோர் மின்னணு வர்த்தக நாமமாகும்.

தயாரிப்புகளின் நம்பகத்தன்மை மற்றும் நீடித்து நிலைத்தன்மையை அதிகரிப்பதன் மூலம், Samsung வழங்கும் இந்த தனித்துவமான சலுகை வாடிக்கையாளர்களுக்கு மிகுந்த ஆறுதலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. மேலும் இது மின்கழிவைக் (ewaste) குறைப்பதற்கும், நிலைத்தன்மையை ஊக்குவிப்பதற்கும், வாடிக்கையாளர்களுக்கு உயர்தர மற்றும் நீடித்த சாதனங்கள் மற்றும் நிலையான வாழ்க்கை முறையை வழங்குவதற்குமான உறுதிப்பாட்டை மேலும் ஒத்துழைப்பு வழங்குகிறது.

Samsungஇன் மேம்படுத்தப்பட்ட Digital Inverter Compressor மற்றும் Digital Inverter Motor ஆகியவையின் தரம் மற்றும் நிலைத்தன்மையில் நிறுவனத்தின் முதலீட்டை நிரூபிக்கின்றதுடன், நிறுவனம் இறுதியாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற முடிந்துள்ளது.

# Hayleys Chairman's Awards விருது வழங்கல் சிறந்த திறமையாளர்கள் கௌரவிப்பு

புத்தாக்கங்களில் ஒரு தசாப்தத்தின் சிறப்பைக் கொண்டாடும் Hayleys PLC, 16 வெவ்வேறு வணிகப் பிரிவுகளில் தனது குழுக்களின் சாதனைகள் மற்றும் முயற்சிகளை அங்கீகரிப்பதற்காக அதன் 10ஆவது ஆண்டு Chairman's Awards விருது வழங்கும் நிகழ்வை நடத்தியது. 25 திட்டக் குழுக்களைச் சேர்ந்த 205 ஊழியர்கள் ஹேய்லிஸ் குழுமத்தின் மிக உயர்ந்த பாராட்டைப் பெற்றனர். இலங்கைக்கு அந்நிய செலாவணியை கொண்டு வரும் புதிய மதிப்பு கூட்டப்பட்ட ஏற்றுமதி கண்டுபிடிப்புகள், மூலப்பொருட்கள் விநியோக சங்கிலியிலிருந்து ரோபோடிக் செயல்முறை தன்னியக்கமாக்கல் வரை அதிநவீன டிஜிட்டல் மாற்றங்கள் மற்றும் இலங்கை முழுவதும் உள்ள பல்வேறு தொழில்துறை சவால்களுக்கு தனித்துவமான தீர்வுகளை வழங்குவதன் மூலம் புதிய பாதையை தொடங்குதல் இங்கே முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

"145 வருட வரலாற்றைக் கொண்ட இலங்கையின் ஒரு நிறுவனமாக, சவால்களை எதிர்கொள்வது எங்களுக்கு ஒன்றும் புதிய விடயமல்ல. எங்கள் ஊழியர்கள் சமூகம் எங்களது மிகப்பெரிய சொத்து மற்றும் அவர்கள் எங்கள் வெற்றிக்கு பெரிதும் உதவுகிறார்கள். எங்களது திறமையான ஊழியர்களுக்கு இந்த ஆண்டு விருதுகளை வழங்கும் திட்டங்களின் மூலம் எங்கள் பல்வேறு பங்குதாரர்களுக்கு மதிப்பை உருவாக்க முடிந்தது.





# HNB FINANCE PLC இன் 78ஆவது கிளை பிலியந்தலையில் திறந்து வைப்பு




இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC தனது 78வது கிளையை அண்மையில் பிலியந்தலையில் திறந்து வைத்துள்ளது.

HNB FINANCEஇன் புதிய கிளை இல. 97, ஹொரண வீதி, பிலியந்தலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனூடாக தங்கக் கடன் வசதிகள், லீசிங் வசதிகள், சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்கள், வணிகக் கடன்கள் மற்றும் வீட்டுக் கடன்கள் உட்பட பலதரப்பட்ட நிதிச் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

பிலியந்தலை பிரதேசத்தில் அதிகரித்து வரும் தங்கக் கடனுக்கான தேவைக்கு இணங்க, இந்த புதிய கிளையில் HNB FINANCE தங்கக் கடன் அலகும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன்,

நிறுவனத்தின் தங்கக் கடன் சேவைகளான Gold Loan Gold Plan மற்றும் VIP Gold Loan ஆகியவை வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ள அனைத்து தங்க கடன் சேவைகளும் எளிதாக்கப்பட்டுள்ளன. HNB FINANCE தங்கக் கடன் சேவையானது குறைந்தபட்ச வட்டியில் ஒரு தங்கப் பவுணுக்கு அதிகபட்ச முன் பணத்தைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது, மேலும் இந்த புதிய தங்கக் கடன் சேவை அலகு சேவைக் கட்டணங்கள் அல்லது பிற மறைமுகக் கட்டணங்கள் இல்லாமல் நம்பகமான பரிவர்த்தனையைத் தேடும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தீர்வாக இருக்கும்.

# யூனியன் வங்கி 2023 முதல் காலாண்டில் வருமான வளர்ச்சி

2023 இன் முதல் காலாண்டு பகுதியில் யூனியன் வங்கி ஒட்டுமொத்த வருமான அதிகரிப்பாக ரூ. 2,064 மில்லியனை பதிவு செய்திருந்தது. இது முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 25 சதவீத அதிகரிப்பாகும். வங்கியினால் தனது வியாபாரச் செயற்பாடுகளை அவதானமாக நிர்வகித்திருந்தமையுடன், புதிய வியாபார வாய்ப்புகளை தெரிவு செய்கையில் அவதானமான செயற்பாடு போன்றவற்றினூடாக இந்த உயர்ந்த பிரதான வங்கியியல் வினைத்திறனை பதிவு செய்ய முடிந்திருந்தது. கடன் பிரிவு மற்றும் திறைசேரி சொத்துக்களின் மீள்விலையிடலினூடாக பெறப்பட்ட மேம்படுத்தப்பட்ட பெறுபேறுகளால், வங்கியின் தேறிய வட்டி வருமானம் (NII) ரூ. 1,622 மில்லியன் எனும் பெறுமதிக்கு 49 சதவீத அதிகரிப்பை பதிவு செய்திருந்தமையின் காரணமாக, வங்கியின் வருமான அதிகரிப்பு பதிவாகியிருந்தது. திறைசேரியினால் அரசாங்க முறிகள் பிரிவு அவதானமான முறையில் நிர்வகிக்கப்பட்டிருந்ததுடன், வங்கிகளுக்கிடையிலான சந்தை வாய்ப்புகளின் அனுகூலங்களையும் எய்தியிருந்தது.

# துணிகர முயற்சிகள் மூலம் மீட்கப்பட்ட சூடானிய இந்தியர்கள்

## விமானப் படைக்கு வெளிவிவகார அமைச்சு பாராட்டு

உள்நாட்டுப் போரில் சிக்கித் தவிக்கும் சூடானில் இருந்து இந்தியர்களை பாதுகாப்பாக மீட்கும் 'ஒபரேஷன் காவேரி' நடவடிக்கையில் இதுவரை மொத்தம் 3862 பேர் மீட்கப்பட்டிருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்கள் 17 விமானப்படை மற்றும் ஐந்து கடற்படை மீட்பு முயற்சிகள் மூலம் இந்தியாவுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். கடந்த 4ம் திகதி மேற்கொள்ளப்பட்ட மீட்பு முயற்சியில் அதி பளுதூக்கும் L17 விமானம் பயன்படுத்தப்பட்டது. மூன்றாம் திகதி இரவு புறப்பட்ட இவ் விமானம் ஜெட்டாவில் எண்ணெய் நிரப்பிக் கொண்டு சூடான் விமான நிலையத்தில் இறங்கி 192 இந்தியர்களை ஏற்றிக்கொண்டு உடனடியாக குஜராத் வந்தடைந்தது. கடந்த மாத இறுதியில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு முயற்சியில் தலைநகர் கார்டூமில் இருந்து 40 கி.மீ தொலைவில் அமைந்துள்ள முறையாக பராமரிக்கப்படாத ஒடு தளத்தில் இறங்கிய சி – 130 விமானம் அங்கிருந்த 121 இந்தியர்களை மீட்டது. விமானம் இறங்குவதற்கான வழிகாட்டல், ஒடு பாதை விளக்குகள், எண்ணெய் நிரப்பும் வசதி, சீரான ஓடுபாதை வசதி என்பன இல்லாத நிலையிலேயே துணிகர முயற்சியாக இவர்கள் மீட்கப்பட்டனர் என வெளிவிவகார அமைச்சர் தனது ட்விட்டரில் தெரிவித்திருந்தார்.

# அசாம் கஷ்டப் பிரதேச தேயிலை உற்பத்தியாளருக்கு நிவாரணம்

அருணாசல பிரதேசத்துக்கும் அசாமுக்கும் இடையிலான எல்லைப் பகுதியில் காணப்படும் சிறு தேயிலைத் தோட்டங்களில் இருந்து பெறப்படும் கொழுந்தை அங்கேயே கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அருணாசல டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

போக்குவரத்து வசதிகள் குறைந்த இப்பகுதி தேயிலை விவசாயிகள் தமது அறுவடையை விற்க சிரமப்பட்ட நிலையில் தாஞ்சி கிராமத்தில் விற்பனைக்கான நிலையமொன்றை ஆசீர்வாத் தேயிலை நிறுவனம் நிறுவியுள்ளது. இப்பகுதியில் 500 சிறிய தேயிலைத் தோட்டங்கள் காணப்படுவதாகவும் வருடாந்தம் 36 ஆயிரம் இலட்சம் கிலோ கொழுந்து உற்பத்தி செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ள இந்நிறுவனம், புதிய ஏற்பாடு விவசாயிகளின் சிரமத்தைக் குறைத்திருப்பதாக கூறியுள்ளது.

இந்த ஏற்பாட்டுக்கு மகிழ்ச்சி தெரிவித்துள்ள சிறு தோட்ட உரிமையாளர்கள், கொள்வனவு நிலையம் ஊருக்கே வந்திருப்பதால் போக்குவரத்து செலவு வெகுவாகக் குறைந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளனர்.

இதனால் உற்பத்தி அதிகரிக்குமெனவும் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கிழக்கின் குரல்



## பாலமுனை வைத்தியசாலையில் பீ.எஸ்.எஸ்.பீ திட்டத்தின் கீழ் ஆய்வுகூடம் திறந்து வைப்பு

### கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரதம அதிதி

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

பாலமுனை பிரதேச வைத்தியசாலையில் (பீ.எஸ்.எஸ்.பீ) திட்டத்தின் கீழ் மீள் புனரமைப்பு செய்யப்பட்ட வைத்திய ஆய்வுகூடம் மற்றும் சமையலறை என்பவற்றின் திறப்புவிழா திங்கட்கிழமை (8) இடம்பெற்றது.

பாலமுனை பிரதேச வைத்தியசாலையின் பிரதேச வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.எம். நௌபல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ. எல். எம். றிபாஸ் பிரதம அதிதியாகவும், பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம். பி. ஏ. வாஜித் கௌரவ அதிதியாகவும், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி உள்ளிட்ட பணிமனையின் பிரிவுத் தலைவர்கள் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ் ஆய்வு கூடத்தினை கல்முனை பிராந்தியத்திற்குரிய தனித்துவமானதும் பிரதானதுமான ஆய்வுகூடமாக மாற்றுவதற்கான திட்ட யோசனையும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் மாகாண மற்றும் மத்திய அமைச்சின் சுகாதார பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆய்வு கூடத்திற்கு பிரதேச மக்களினதும் அபிவிருத்தி குழுவினதும் அளப்பரிய பங்களிப்பு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், வைத்தியசாலையின் நலன் விரும்பிகளால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருட்களாலும் வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட வாகன தரிப்பிடமும் பாவனைக்காக அன்றய தினம் திறந்து வைக்கப்பட்டமமை குறிப்பிடத்தக்கதாகும்.

## செங்கலடி பிரதேச செயலக பிரிவில் கோழிக் குஞ்சுகள் வழங்கும் நிகழ்வு



(பாசிக்குடா நிருபர்)

ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் முகமாக, சுயதொழிலுக்காக பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (8) பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது பிரதேசத்தின் பல்வேறு கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 25 பேருக்கு தலா 25,000 ரூபா பெறுமதியிலான கோழிக் குஞ்சுகள், மருந்துப்பொருட்கள் மற்றும் வளர்ப்பு தீன்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நிருபா பிருந்தன், கணக்காளர் திருமதி டிலானி ரேவதனன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எ.சுதாகரன், மற்றும் பிரதேச செயலக உத்தியோகஸ்த்தர்களும் கலந்து கொண்டனர்.

இவ் உதவியினை கனிஸ்கா நிறுவனப் பணிப்பாளர் வழங்கியிருந்தார்.

கோழி வளர்ப்பிற்கான ஒரு நாள் பயிற்சியானது பிரதேச செயலகத்தில் கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் வழங்கியிருந்தது.

இவ் வாழ்வாதார உதவியானது மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மூதூர் ஜாயா நகரில் டெங்கு ஒழிப்பு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட ஜாயா நகர் கிராம சேவகர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி சனிக்கிழமை (06) மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் ஜாயா நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றது.

மூதூர் பிரதேசத்தில் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதையும், மக்களை டெங்கு நோயில் இருந்து பாதுகாக்கும் நடவடிக்கையாகவும் முன்னெடுக்கப்பட்ட இக்கிராம சுத்திகரிப்புப் பணியில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்பு செயலணி உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை ஜாயா நகர் கிராம சேவகர் பிரிவுக்கான பொதுச் சுகாதார பரிசோதகரினால் மக்களுக்கு டெங்கு விழிப்பூட்டல் செய்யப்பட்டதுடன், டெங்கு பெருகும் இடங்கள் முழுமையாக சுத்தம் செய்யப்பட்டன.

## நீர்க் கட்டணம் செலுத்தாதோரின் இணைப்புக்கள் துண்டிக்கப்படும்

### அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் காரியாலயத்திற்குட்பட்ட பிரதேசங்களில் நீர்க் கட்டணம் செலுத்தாமல் நிலுவையில் உள்ள நீரிணைப்புக்களின் நீர் விநியோகம் துண்டிக்கப்படும் என, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் யூ.கே.எம்.முஸாஜீத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மின்பட்டியல், உதிரிப்பாகங்கள், இரசாயனங்களுக்கான கட்டணங்கள் அதிகரித்துள்ளமையினால் குடிநீரை உற்பத்தி செய்து தொடர்ச்சியாக விநியோகிப்பதில் எமது சபை பாரிய சவாலை எதிர்நோக்கியுள்ளது.

ஆதலால், நீர்ப்பாவனையாளர்கள் தங்களது நிலுவையில் உள்ள அனைத்து கட்டணங்களையும் முழுமையாக செலுத்துமாறும், அவ்வாறு செலுத்த தவறும் நீரிணைப்புக்களை எந்தவித முன்னறிவிப்புமின்றி நீர் வழங்கல் சபையின் 1974ஆம் ஆண்டின் 2ஆம் சட்டத்திற்கு அமைவாக துண்டிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே, நீர்ப்பட்டியலை முழுமையாக செலுத்தி நீர்த்துண்டிப்பிலிருந்தும் ஏனைய அசௌகரியங்களிலிருந்தும் தவிர்ந்து கொள்வதோடு, மாதாந்தம் கிடைக்கும் நீர்ப்பட்டியலை உடனுக்குடன் செலுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் நீர்ப்பாவனையாளர்களை கேட்டுள்ளார்.

## மாணவர்களுக்கு கௌரவிப்பு

(கல்லடி குறூப் நிருபர்)

மட்டக்களப்பு எக்ஸ்ரிம் சொட்டாக்கன் கழகத்தில் தற்காப்பு கலை பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு சென் ஜேன்ஸ் மண்டபத்தில் எஸ்.சுகிர்தன் தலைமையில் சனிக்கிழமை (6)இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கராத்தே சம்மேளத்தின் தலைவர் மொஹமட் இக்பால் கலந்து கொண்டதுடன், பிரதம அதிதியாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் மற்றும் கௌரவ அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வே.ஈஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

இதன் போது தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் சாதனை படைத்தவர்களுக்கு அதிதிகளினால் சான்றிதழ் மற்றும் வெற்றிக் கேடயங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

## அம்பாறை மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகள் மற்றும் திட்டங்களை தயாரித்து வடிவமைப்பது தொடர்பான, கலந்துரையாடல் ஒன்று அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இடம்பெற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அம்பாறை மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான மகாநாடு இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ளதால் அதற்கு முன்னோடியாக, ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய திட்ட வரைபுகள், விடயதானங்கள், எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.



திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டபிள்யூ.வீரசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாஉல்லா, எஸ்.எம்.எம்.முசாரப், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனீஸ், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி மற்றும் அரசாங்க அதிகாரிகள், சுற்றுலாத்துறை அமைப்பினர், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## நிந்தவூரில் பிறை மாநாடு

(துறைநீலாவணை நிருபர்)

கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக் குழு நடத்தும் பிறை மாநாடு ஒன்று கிழக்கிலங்கையின் நிந்தவூரில் நடைபெறவிருக்கின்றது.

இலங்கை வளி மண்டலவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட வானிலை அதிகாரியும், கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு உறுப்பினருமான கலாநிதி ஏ.எம்.முஹம்மத் சாலிஹீனின் மேற்பார்வையிலும், நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசலின் ஏற்பாட்டிலும் இப் பிறை மாநாடு நடைபெறவுள்ளது. முஸ்லிம் மக்களின் பிறை பார்த்தல் தொடர்பான பல்வேறு விடயங்களுக்கும் தெளிவூட்டும் வகையிலான இந்த மாநாடு எதிர்வரும் சனிக்கிழமை (13) நடைபெற விருக்கின்றது. கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழுத் தலைவர் உஸ்தாத் கலீபதுஷ் ஷாதுலி எம்.பீ.எம்.ஹிஷாம் (அல்பத்தாஹி) தலைமையில், நிந்தவூர் அல்மஸ்ஹர் பெண்கள் உயர்தரப்பாடசாலை, மண்டபத்தில் இம் மாநாடு நடைபெறும்.

## ஸாஹிரா கல்லூரி வீதி ஒரு வழி பாதையாக மாற்றம்

(சாய்ந்தமருது விசேட, கல்முனை குறூப் நிருபர்கள்)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மற்றும் ஸாஹிரா கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு செல்லும் மற்றும் பாடசாலையை விட்டு வீடு செல்லும் நேரங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக ஸாஹிரா கல்லூரி வீதியினை ஒரு வழிப்பாதையாக மாற்றுவதற்கான பெயர்ப்பலகையினை கல்முனை வீதி அபிவிருத்தி திணைக்களம் புதன்கிழமை (03) பொருத்தியுள்ளது.

இதற்கமைவாக பாடசாலை ஆரம்பிக்கும் நேரங்களில் காலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை மற்றும் பாடசாலை விடும் நேரங்களில் மதியம் 1.30 மணி முதல் 2.30 மணி வரை, வெள்ளிக்கிழமை பாடசாலை விடும் நேரமான காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரை குறித்த நேரங்களில் பிரதான வீதியிலிருந்து ஸாஹிரா கல்லூரி வீதிக்கு எந்தவித வாகனங்களும் உட்செல்ல முடியாதவாறு ஒரு வழிப்பாதையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக, கல்முனை வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்று பொறியியலாளர் எந்திரி எம்.எம். முஹம்மட் முனாஸ் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் ஆரம்பிக்கும் மற்றும் பாடசாலை விடும் நேரங்களில் வாகன சாரதிகள் பிரதான வீதியிலிருந்து ஸாஹிரா கல்லூரி வீதிக்கு உட்செல்வதை தவிர்த்து மாற்று வீதிகளை பயன்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சாய்ந்தமருதில் நாளை நடமாடும் சேவை

(கல்முனை குறூப் நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொது மக்கள் நடமாடும் சேவையொன்று, நாளை 11 ஆம் திகதி வியாழக்கிழமை இடம் பெறவுள்ளது. காலை 9.00 மணி முதல் மாலை 4 மணி வரை பொலிவேரியன் கிராமத்தில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்நடமாடும் சேவையில் காணி, சமூக சேவைகள், சமுர்த்தி, மோட்டார் போக்குவரத்து, மகளிர் அபிவிருத்தி, தேசிய அடையாள அட்டை ஆகிய பிரிவுகளில் பொது மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்கவுள்ளன. சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள பொது மக்கள் தங்களது தீர்க்கப்படாத நீண்ட கால பிரச்சினைகளை நிவர்த்தி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தோப்பூர் இக்பால் நகர் முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.றிபாஸினால் பிளாஸ்டிக் கதிரைகள் கையளிக்கப்பட்ட போது.

(படம் – தோப்பூர் குறூப் நிருபர்)

## மோட்டார் சைக்கிள் திருட்டு; மக்களின் உதவியை நாடும் பொலிஸார்

(பெரியநீலாவணை விசேட நிருபர்)



வீட்டின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டு திருடிச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் தொடர்பில், தகவல் ஏதாவது தெரிந்திருப்பின் பொதுமக்கள் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஷ்ணு கோவில் வீதி பகுதியில் உள்ள வீடொன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கறுப்பு மற்றும் சிவப்பு நிறம் கொண்ட மோட்டார் சைக்கிள் ஞாயிற்றுக்கிழமை (7) காலை 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் இனந்தெரியாத இரு சந்தேக நபர்களினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக திங்கட்கிழமை (8) பொலிஸ் முறைப்பாடு கிடைக்க பெற்றிருந்தது.

சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய பெரியநீலாவணை பொலிஸார் சந்தேக நபர்களை தேடி வலை விரித்துள்ளனர்.

களவாடி செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் தொடர்பிலோ அல்லது சந்தேக நபர்கள் தொடர்பிலோ ஏதாவது தகவல் அறிந்திருந்தால் 0718594528, 0672050674 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு பெரியநீலாவணை பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் வெசாக்கை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட தன்சல் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (08) திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு முன்னால் இடம்பெற்றது. மாகாண பணிப்பாளர் ஏ.ஜி.தெய்வேந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வுக்கு, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

(படம் – முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)

# வடக்கின் உதயம்

## சிறுவர்களை கடத்தும் முயற்சி; மன்னாரில் பாடசாலைகளுக்கு இராணுவ பாதுகாப்பு!

மன்னார் குறூப் நிருபர்



மன்னார் மாவட்டத்தில் சிறுவர்களை கடத்த முற்படும் சம்பவங்கள் இடம்பெறுவதாக தெரியவந்ததைத் தொடர்ந்து, அம்மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை (09) முதல் விசேட இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மன்னாரில் சிறுவர்களை கடத்த முற்படும் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் கடந்த சனி (06), ஞாயிறு (07) தினங்களில் மக்கள் நடமாட்டம் குறைந்த பாதையால் சென்ற தமக்கு உணவுப் பொருட்களை வழங்கி இனந்தெரியாத சிலர் கடத்த முற்பட்டதாகவும், பாதிக்கப்பட்ட இரு சிறுவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டி மெல், வலயக் கல்விப் பணிப்பாளர், பொலிஸார், இராணுவத்தினரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், பாடசாலைகளுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கு அருகில் இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், இந்தச் சம்பவத்தின் பின்னர், அதிகளவான பெற்றோர் தமது பிள்ளைகளுடன் பாடசாலைகளுக்கு வருவதுடன், மாணவர்களும் ஒன்றுசேர்ந்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதைத் தொடர்ந்து, கடத்தல் கும்பல் மற்றும் இவர்கள் பயன்படுத்தும் வாகனங்கள் தொடர்பாக பொலிஸார் விரிவான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## டைனமைட் வெடிபொருட்களுடன் மன்னாரில் கைது செய்யப்பட்ட 7 மீனவர்களுக்கு விளக்கமறியல்

தலைமன்னார் விசேட, மன்னார் குறூப் நிருபர்கள்



டைனமைட் வெடிபொருட்களுடன் கைது செய்யப்பட்ட 7 மீனவர்களை இம்மாதம் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மன்னார் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் நோக்கில் வெளிக்கள மீன்பிடிப் படகொன்றில் டைனமைட் வெடிபொருட்களுடன் மன்னார் நகர் கடற்கரையிலிருந்து சென்ற குற்றச்சாட்டில் இம்மீனவர்களை, மன்னார் தென் கடலில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (08) காலை வங்காலை பிரதேச கடற்படையினர் கைது செய்து, பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இம்மீனவர்களின் படகைச் சோதனையிட்ட போது, அதில் மீன்கள் இன்றிய நிலையில் டைனமைட் வெடிபொருட்கள் காணப்பட்டன. இதனைத் தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, இவர்களை நீதிமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (09) முன்னிலைப்படுத்திய போதே, இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## நானாட்டான் கிளினிக்கில் கத்திமுனையில் திருட்டு

மன்னார் குறூப், தலைமன்னார் விசேட நிருபர்கள்

மன்னார், நானாட்டான் பிரதேசத்தில் ஓய்வுபெற்ற வைத்தியரொருவரின் தனியார் கிளினிக்கினுள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (07) இரவு 9.00 மணியளவில் நுழைந்த திருடர்கள் இருவர், கத்தி முனையில் சுமார் 5 இலட்சம் ரூபா பணத்தையும் தங்க நகைகளையும் திருடிச் சென்றுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இத்திருடர்கள் தமிழ் மற்றும் சிங்களத்தில் பேசிக்கொண்டு வைத்தியருக்கு கத்தியைக் காட்டி அச்சுறுத்தி இத்திருட்டை புரிந்துள்ளனர்.

அங்கிருந்த பெண்களின் நகைகளே திருடப்பட்டுள்ளன.

இதன்போது, வைத்தியரின் மூக்குக்கண்ணாடி உடைந்ததில் வைத்தியருக்கு முகத்தில் காயம் ஏற்பட்டுள்ளது. இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக முருங்கன் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட வைத்தியர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (08) முறைப்பாடு செய்துள்ளார்.

## மக்களின் காணிகளுக்குள் அனுமதியின்றி விகாரைகள் கட்டப்படுவதை எதிர்க்கிறேன்

### 'ஜனாதிபதியுடனான சந்திப்பில் வலியுறுத்துவேன்' என்கிறார் அங்கஜன் இராமநாதன் எம்.பி.

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்



உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசம் எனும் போர்வையில் அப்பகுதிக்குள் விகாரைகள் அமைக்கப்படுவதற்கு தாம் என்றும் எதிர்ப்புத் தெரிவிப்பதாக, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ். குரும்பசிட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்ற கிராமிய விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"உயர் பாதுகாப்பு வலயத்தில் பாதுகாப்புத் தேவைகளுக்கு அப்பால், விகாரைகளை அமைப்பதை நான் என்றும் எதிர்ப்பதுடன், எதிர்வரும் வாரத்தில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் இவ்விடயத்தை நிச்சயமாக நான் வலியுறுத்தவுள்ளேன்.

விகாரைகள் கட்டப்படுவதற்கு நான் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால், அவ்விகாரைகள் மக்களின் காணிகளில் அனுமதியின்றி கட்டப்படுவதை எதிர்க்கிறேன். உயர் பாதுகாப்பு வலயத்தினுள் சொந்தக் காணிகளைக் கொண்டுள்ள மக்களின் வேதனையை நான் அறிவேன். உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த எனது காணிகளும் அண்மையிலேயே விடுவிக்கப்பட்டன. வளம் மிக்க எமது நிலங்கள் எமது மக்களுக்கு திரும்பக் கிடைக்க வேண்டியது அவசியம்" எனத் தெரிவித்தார்.

## புளியம்பொக்கணையில் விபத்து; இளைஞர் பலி

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (09) அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

அத்துடன், இவ்விபத்தில் 2 மாடுகளும் உயிரிழந்துள்ளன.

கண்டாவளை பிரதேசத்திலிருந்து புளியம்பொக்கணை பிரதேசம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று, மாட்டுடன் மோதியதில் இவ்விபத்துச் சம்பவித்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

புளியம்பொக்கணையைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் பொலிஸார் ஒப்படைத்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஊடகவியலாளர் ஜெகனின் இலக்கியநூல் ஆய்வு இறுவட்டு

### மன்னார் அரசாங்க அதிபரிடம் கையளிப்பு

மன்னார் குறூப் நிருபர்



பண்டையகாலத்தில் மன்னார் மாவட்டம் எவ்வாறு சிறப்புடன் இருந்தது என்பதுடன், மன்னார் இராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்தை விரைவுபடுத்தக் கோருவதற்கான இலக்கிய நூல்களில் ஆய்வு செய்து உருவாக்கப்பட்ட மன்னார் ஊடகவியலாளர் எஸ்.ஜெகனின் காணொளி அடங்கிய இறுவட்டை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் அ.ஸ்ரான்லி டி மெல்லிடம் அந்த ஊடகவியலாளர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (08) கையளித்து வைத்தார்.

இந்த ஊடகவியலாளரின் முயற்சிக்கு மன்னார் ரோட்டரிக் கழகம் அனுசரணை வழங்கியது.

ஆதிகாலத்தில் பொருளாதாரத்திலும் வாழ்வியலிலும் மிகச் சிறப்பாக விளங்கிய மன்னார் மாவட்டம், தற்போது பொருளாதாரத்தில் வீழ்ச்சியுற்று பின்தங்கிய மாவட்டமாகக் காணப்படுவதற்கு காரணங்கள் என்ன என்பது தொடர்பாக இலக்கிய நூல்களில் ஆய்வு செய்து அவை காணொளியாக தொகுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஆகியோருக்கும் வழங்கும் வகையில் இறுவட்டுகள் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

## கிளிநொச்சியில் டெங்கு பரவல்; விழிப்புணர்வு கலந்துரையாடல்



பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு நோய் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல், அம்மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (08) நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் செயலாளர் சமன் பந்துலசேனவின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

கிளிநொச்சியில் கிராம மட்டங்களில் குழுக்களை நியமித்து அக்குழுக்களின் உதவியுடன் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்க தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறும் வடமாகாண ஆளுநரின் செயலாளர் பணித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை பொறுப்பு வைத்தியர் மற்றும் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலாளர்கள், மாவட்ட தொற்றுநோயியல் பிரிவு வைத்தியர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## வடக்கில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு

யாழ். விசேட நிருபர்



முள்ளிவாய்க்கால் சம்பவத்தை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு, வடமாகாணத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (09) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெறுகின்றது. இந்நிலையில், யாழ். வல்வெட்டித்துறை பிரதேசத்தில் கஞ்சி வழங்கும் நிகழ்வை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பித்து வைத்தனர்.

## தென்மராட்சி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

சாவகச்சேரி விசேட நிருபர்

யாழ். தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள 16 பாடசாலைகளைச் சேர்ந்த 506 மாணவர்களுக்கு புத்தகப் பைகள் உட்பட கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (08) நடைபெற்றது.

எல்.ஓ.எல்.சி. நிறுவனத்தினுடைய 'வாழ்வின் சக்தி' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாணவர்களின் கல்வியை வளப்படுத்தும் நோக்கில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## மருதமடு கொலைக்குற்றவாளிகள் நால்வர் நிரபராதிகளாக விடுதலை

தலைமன்னார் விசேட, மன்னார் குறூப் நிருபர்கள்

மன்னார், மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தச்சனா மருதமடு பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவமொன்று தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட நால்வரை அக்குற்றச்சாட்டிலிருந்து மன்னார் நீதவான் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

தச்சனா மருதமடு பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிச் சூடு பட்டு ஒருவர் மரணமடைந்தமை தொடர்பாக இவர்கள் நால்வரும் சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த மார்ச் 25ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வந்தனர்.

இந்நிலையில், இது தொடர்பான வழக்கு விசாரணை, மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் நிரஞ்சனி முரளிதரன் முன்னிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (08) நடைபெற்ற போதே, இக்குற்றச்சாட்டிலிருந்து இவர்களை நீதவான் விடுதலை செய்துள்ளார்.

மரணமடைந்த நபரின் கவனக்குறைவால் மரணம் இடம்பெற்றதாக பொலிஸாரின் அறிக்கையை மேற்கோள் காட்டி, குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி செ.டினேசன் அறிக்கை சமர்ப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து, இவ்வழக்குத் தொடர்பாக மடு பொலிஸார் தாக்கல் செய்த கடந்தகால அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் இவர்கள் நால்வரையும் நிரபராதிகளாக தீர்ப்பளித்து நீதவான் விடுதலை செய்துள்ளார்.

## 4,603 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் தேவை

### கிளிநொச்சி அரசாங்க அதிபர்

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் 4,603 குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டு வசதி தேவைப்படுவதாக, அம்மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் வீட்டு வசதி தேவைப்பட்ட 33,280 குடும்பங்களில் 28,677 குடும்பங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கரைச்சியில் 2,433 குடும்பங்களுக்கும் கண்டாவளையில் 1,439 குடும்பங்களுக்கும் பூநகரியில் 104 குடும்பங்களுக்கும் பச்சிலைப்பள்ளியில் 627 குடும்பங்களுக்கும் வீட்டு வசதி தேவைப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை 2018ஆம் 2019ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தி வீட்டுத் திட்டத்தை பெற்றுக்கொண்ட 4,952 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டத்தை பூரணப்படுத்துவதற்கான கொடுப்பனவு 1912.7 மில்லியன் ரூபாவை வழங்க வேண்டியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.



வற்றாப்பளை கலையியல் திரைப்பட பன்னாட்டுக் கூடத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறும்பட, ஆவணப்படத் தயாரிப்புப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும் கேடயங்களையும் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வழங்கி வைத்தார். வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை (06) நடைபெற்ற இந்நிகழ்வின் போது, குறும்படங்களும் திரையிடப்பட்டன. (படங்கள்: யாழ். விசேட நிருபர்)




# மலையகத்தில் தொடரும் சீரற்ற காலநிலை வாகன சாரதிகள் அவதானம்

(ஹற்றன் விசேட நிருபர்)



நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையை தொடர்ந்து மலையகத்தில் கடும் மழை பெய்து வருகிறது. அதுமட்டுமின்றி பனிமூட்டம் காரணமாக வாகன சாரதிகளை அவதானமாக இருக்குமாறு போக்குவரத்து பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மாலை வேளையில் மழையுடனான காலநிலை நிலவி வருகிறது. நுவரெலியா மாவட்டத்தில் மழையுடனான காலநிலை நிலவிவருவதுடன் ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் கலுகல பிட்டவல, கினிகத்தேனை, கடவல, வட்டவளை, ஹற்றன் உள்ளிட்ட பகுதிகளிலும் ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் குடகம, கொட்டகலை, சென்கிளையார், தலவாக்கலை, ரதலல், நானுஓயா உள்ளிட்ட பகுதிகளிலும் கடும் பனிமூட்டம் நிலவுவதால் வாகனசாரதிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர். இந்த வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக தங்களது வாகனங்களை செலுத்த வேண்டுமென போக்குவரத்து பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். வளைவுகள் நிறைந்த இவ்வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் மழை மற்றும் பனிமூட்டம் காணப்படும் பகுதிகளில் பயணிக்கும் போது தங்களுக்கு உரிய பக்கத்தில் வாகனங்களின் முகப்பு விளக்குகளை ஒளிரச்செய்தவாறு பயணிக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்மூலம் வீதி விபத்துக்களை தவிர்த்து கொள்ளலாம் என பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை தொடர்ச்சியாக மாலையில் மழை பெய்து வருவதனால் பல பிரதேசங்களில் மண்சரிவு மற்றும் கற்கள் புரளும் அபாயமும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேநேரம் கடந்த பல மாதங்களாக வறட்சியான காலநிலை நிலவியதால் காசல் ரீ, மவுசாக்கலை, கெனியோன் லக்ஷபான, நவலக்ஷபான, பொல்பிட்டிய மேல்கொத்மலை உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மிகவும் குறைவடைந்துள்ளன. இந்நிலையில் தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளமையால் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் சடுதியாக அதிகரிக்குமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

# வட்டவளை த. ம.வித்தியாலயத்தில் ஆசிரிய, மாணவர் பாராட்டு விழா



(கினிகத்தேனை தினகரன் நிருபர்)

ஆசிரியர்கள் தமது உழைப்பை முறையாக மேற்கொள்வார்களாகவிருந்தால் சமூகம் தமது பங்களிப்பை வழங்குவதற்கு எப்போதும் காத்திருப்பதாக ஹற்றன் வலயக் கல்விப்பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

வட்டவளை தமிழ் மகா வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், ஆசிரிய சமூகம் சிறப்பாக கற்றுக்கொடுப்பீர்களாகவிருந்தால் சமூகம் தமது பங்களிப்பை வழங்குவதற்கு எப்போதும் தயாராகவே இருக்குகின்றது.

மனிதன் வாழும் போதே கௌரவத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இன்னும் செல்லவேண்டிய பயணங்கள் நிறைய உள்ளதாக அவர் தெரிவித்தார்.

## அதிசொகுசு காரிலிருந்து கஞ்சா போதைப்பொருள்

### வாகன சாரதி உட்பட மூவர் கைது

அநுராதபுரத்திலிருந்து கண்டி வரை பயணித்த அதிசொகுசு காரிலிருந்து கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மாத்தளை குடுகல பிரதேசத்தில் வைத்து காரை இடைநிறுத்தி சோதனையிட்ட திகனை அம்பகோட்டே விசேட அதிரடிப்படையினர் காரிலிருந்து கஞ்சா போதைப்பொருளை மீட்டுள்ளனர். காரை மீட்டு கட்டுகஸ்தோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அக்காரில் கஞ்சா கடத்தப்படுவதாக கிடைத்த தகவலுக்கமையவே சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது ஒருதொகை கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது. இதனையடுத்து வாகன சாரதி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## சமாதான நீதவானாக சத்திய பிரமாணம்



கண்டியைச் சேர்ந்த ஜெயந்திரபூபதி அகில இலங்கை சமாதான நீதவானாக கண்டி மேலதிக மஹேஸ்த்திராத் மாலிந்த ஹர்சன த அல்விஸ் முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்துகொண்டார். இவர் கண்டி புனித சில்வெஸ்ட்டர் கல்லூரியின் பழைய மாணவரும் ஓய்வு பெற்ற உப பொலிஸ் பரிசோதகருமாவார். தற்பொழுது பல்வேறு சமூக அமைப்புகளில் பணியாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(படம்: எம்.ஏ.அமீனுல்லா )

# நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் வெண்புரை நீக்கும் சத்திர சிகிச்சை இடைநிறுத்தம்

## கண் சத்திர சிகிச்சையின் பின்னர் பயன்படுத்தப்பட்ட மருந்துகளே பாதிப்புகளுக்கு காரணம்



(நுவரெலியா தினகரன் நிருபர்)

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சையினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு பயன்படுத்தப்பட்ட மருந்துகளே காரணமென நுவரெலியா மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் மஹேந்திர செனவிரத்ன விளக்கமளித்துள்ளார்.

இதுதொடர்பில் வைத்தியர் மஹேந்திர செனவிரத்னவை தொடர்புகொண்டு வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 10 பேருக்கு கண்பார்வை இழக்கப்பட்டுள்ளதாக பல்வேறுவிதமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

### மாவட்ட வைத்திய அதிகாரி மஹேந்திர செனவிரத்ன விளக்கம்

கடந்த ஏப்ரல் மாதம் பௌர்ணமி தினத்தன்று 05.04.2023 நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் 34 பேருக்கு கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதாவது கண் பார்வை குறைந்து கண்ணில் வெண்புரை இருக்கின்றவர்களுக்கே இந்த கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 10 பேர் சத்திரசிகிச்சையின் பின்னர் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக கூறி மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். கண் சிவப்பு நிறமாக மாறுதல், கண் உறுத்தல், கண்ணில் வருத்தம் கண்பார்வை குறைபாடு போன்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாக இவர்கள் தெரிவித்தனர். நாம் உடனடியாக இவர்களுக்கான சிகிச்சைகளை ஆரம்பித்ததுடன் இவர்களில் ஒரு சிலரை கண்டி வைத்தியசாலைக்கும் அனுப்பி வைத்துள்ளோம். அவர்களில் அநேகமானவர்களுக்கு தற்பொழுது 30 வீதமான பார்வை திரும்பியுள்ளது. நாம் தொடர்ந்தும் அவர்களுக்கு சிகிச்சையளித்து வருகின்றோம்.

இந்த நிலைமைக்கு காரணம் வைத்தியர்கள் அல்ல என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு பயன்படுத்தப்பட்ட மருந்துகளே முக்கிய காரணம். கண் சத்திர சிகிச்சையின் பின்னர் பயன்படுத்தப்பட்ட மருந்தில் கண்களுக்கு தீங்கு விளைவிக்கும் இரசாயன பதார்த்தம் அடங்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த மருந்தானது இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் வெண்புரை நீக்கும் சத்திரசிகிச்சைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நுவரெலியாவில் மாத்திரம் அல்ல கொழும்பிலும் இடம்பெற்றுள்ளது. எனவே இது வைத்தியர்களின் தவறு அல்ல என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையிலும் இந்த மருந்து பாவிக்கப்பட்டு அங்கும் கண் பார்வை பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

## பலாங்கொடை ஆதார வைத்தியசாலை சத்திரசிகிச்சை பிரிவில் பணிகள் ஸ்தம்பிதம்

### அவசர சத்திர சிகிச்சைகள் அல்லாத அனைத்தும் இடைநிறுத்தம்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அவசர சத்திரசிகிச்சை பிரிவில் போதிய வைத்தியர்களின்மையால் அப்பிரிவில் அவசர சத்திர சிகிச்சைகள் அல்லாத அனைத்து சிகிச்சைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நோயாளர்கள் தெரிவித்தனர்.

இதன்காரணமாக தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கும் வீணான அலைச்சல்களுக்கும் ஆளாகி வருவதாக நோயாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இதுவிடயமாக பலாங்கொடை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி சாமிக்கா மாரஸ்தொடவிடம் வினவிய போது, அவர் தெரிவித்ததாவது, பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை பிரிவுக்கு குறைந்தபட்சம் ஆறு வைத்திய அதிகாரிகள் தேவைப்படுகின்றனர். எனினும் தற்போது மூன்று வைத்தியர்கள் மாத்திரமே சேவையில் உள்ளனர்.

இதன்காரணமாக அவசர சத்திரசிகிச்சை மட்டுமே தற்பொழுது மேற்கொள்ளப்படுவதுடன் ஏனைய அவசரம் இல்லாத சத்திர சிகிச்சைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# மலையகம் – 200 மரநடுகை வாரம் மே 14 தொடக்கம் மே 21 வரை

மலையகம் எனும் பிரக்ஞையில் இணைபவர்கள் மலையகம் 200 மர நடுகை வாரத்தில் மரக்கன்றுகளை நட்டு மலையகம் எனும் உணர்வால் ஒன்றிணைவோம் என நிகர் சமூக கலை இலக்கிய அரங்கத்தின் பிரதான அமைப்பாளர் அருணாசலம் லெட்சுமணன் கோரிக்கை விடுத்துள்ளார். நிகர் சமூக கலை இலக்கிய அரங்கத்தால் எதிர்வரும் 14.05.2023 திகதி தொடக்கம் 21.05.2023 வரையான காலப்பகுதியை மலையகம் 200 மர நடுகை வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளனர். அச்செயற்பாடுகளுக்கு சமூக மட்டத்தில் தேசிய மட்டத்தில் சர்வதேச மட்டத்தில் ஒத்துழைப்பை திரட்டும் வகையில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிரித்தானிய காலனித்துவத்தில் தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட மக்கள் இலங்கையில் பல வாழ்வியல் அனுபவங்களோடு தங்கள் இருப்பை இருநூறு வருடகாலம் நிலைநிறுத்தியுள்ள நிலையில் (1823 – 2023) அதன் ஞாபகார்த்தமாக மரக்கன்றுகள் நடுவதை ஊக்குவிக்கும் வகையிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறன.

மலையக சமூகத்தின் வரவு, உழைப்பு, வாழ்வு அனுபவங்களை மீட்டிப்பார்க்கும் வகையிலான தொடர் ஆய்வரங்க செயற்பாட்டை நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம் இணைய வழியில் எதிர்வரும் மே மாதம் தொடக்கம் தொடர்ந்து ஐம்பது மாதங்கள் நடாத்த திட்டமிட்டுள்ளோம்.

இலங்கையில் 200 வருட வாழ்வியலில் பல அனுபவங்களைக் கொண்ட சமூகமாக மலையகம் திகழ்கிறது. வரவுக்கான நிர்ப்பந்தம் சூழல் மாற்றத்தால் கற்றுத்தந்த பாடங்கள், வாழ்வியல் அம்சங்கள், சமூக பொருளாதார கல்வி, பண்பாட்டு அம்சங்கள், அரசியல், சமூகவியல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகள் ஊடாக பெற்ற அனுபவங்கள் தனித்துவமானவை. அவ் அனுபவங்களை மீட்டிப்பார்க்கும் தருணமாகவும் அடுத்தக்கட்ட நகர்வுகளுக்கான முன்மொழிவுகளை தீர்மானிக்கும் களமாகவும் மலையகம் 200 அனுஷ்டிக்கும் காலக்கட்டமாக இது திகழ்கிறது.

# மாத்தளை மாவட்டத்தில் இதுவரை 85 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம்

(உக்குவளை விசேட நிருபர்)

மாத்தளை மாவட்டத்தில் 85 எயிட்ஸ் நோயாளர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாத்தளை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலேயே இத்தகவல் வெளியிடப்பட்டது.

மாத்தளை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் அதன் தலைவர் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாலக்க பண்டார கோட்டகொட தலைமையில் மாவட்ட செயலக வீர கெப்பிட்டி பொல மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த விசேட வைத்திய நிபுணர் ஹிருக்கா ராஜபக்ஷ, எயிட்ஸ் நோய் மாத்தளை மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றது. அதுவும் ஓரின சேர்க்கையாளர்கள் மத்தியில் இந்நோய் அதிகளவில் பரவுகின்றது. இதனை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என அவர் தெரிவித்தார். மேலும் மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை, சீகிரிய போன்ற சுற்றுலா வலயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது.



தற்பொழுது மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள எயிட்ஸ் நோயாளிகளுக்கு வைத்திய சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருவதாகவும் விசேட வைத்திய நிபுணர் ஹிருக்கா ராஜபக்ஸ மேலும் தெரிவித்தார்.

## தெல்தோட்டையில் வெசாக் நிகழ்வுகள்

தெல்தோட்டை ஸ்ரீ ரதனாஷ்ரம விகாரையின் வருடாந்த வெசாக் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. தெல்தோட்டை ஸ்ரீ ரத்தனாஷ்ரம விகாரை ஆலயத் தலைவர் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் வெசாக் விளக்குப் போட்டி, பத்திபாடல், பொது கலை போட்டி போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றன.

பங்கேற்பு மற்றும் வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்தின, தெல்தோட்டை பிரதேச செயலாளர் உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.



## முச்சக்கர வண்டி விபத்து: மூவர் படுகாயம்

ஹப்புத்தளை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ராத்கராவ பகுதியில் முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டி சாரதி, இரண்டு பெண்கள் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த மூவரும் பொரலந்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தியத்தலாவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் கொழும்பிலிருந்து பொரலந்த பகுதியில் அமைந்துள்ள தமது வீட்டுக்கு திரும்பும் போதே இவ்விபத்து நேற்று காலை இடம்பெற்றுள்ளது. முச்சக்கர வண்டி 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.



# நல்லிணக்க செயற்பாடுகளை வலுப்படுத்துவதில் இலங்கை உறுதி

## அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ



நல்லிணக்க செயற்பாடுகளை வலுப்படுத்துவதில் இலங்கை உறுதியாக இருப்பதாக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை பரோமீற்றர் (SLB) ஆய்வு அறிக்கைகள் 2021 மற்றும் 2022 ஐ வெளியிடும் நிகழ்வில் அறிக்கைகளை வெளியிட்டு உரையாற்றிய அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ,

இலங்கையின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான (TRC) அடிப்படை செயற்பாட்டு சூத்திரம் நல்லிணக்கப் பொறிமுறையின் ஒரு பகுதியாக வகுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நல்லிணக்கத்தை வலுப்படுத்த தென்னாபிரிக்கா ஏற்றுக் கொண்ட உண்மை மற்றும் நல்லிணக்க மாதிரியை ஆய்வு செய்வதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் இணைந்து தான் தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்ததை அமைச்சர் நினைவு கூர்ந்தார்.

இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க முயற்சியில் பங்கேற்பதற்கு தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ராமபோஷா ஒப்புக் கொண்டதாகவும் அமைச்சர் கூறினார்.

2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம், அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் போன்ற புதிய சட்டங்களைக் கொண்டு வந்து ஜனநாயகம் மற்றும் சமூக நீதியின் பாதையில் நாட்டை வழிநடத்த எடுத்த நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் விரிவாக எடுத்துரைத்தார்.

நாட்டிற்கு ஜிஎஸ்பி பிளஸ் சலுகை கிடைக்காமல் போய்விட்டது, அப்போது ஐரோப்பாவுக்கான மீன் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது என்று அவர் கூறினார்.

2015ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசு சுதந்திரமான ஆணைக்குழுவை நிறுவியதன் மூலம் ஜனநாயகம் மற்றும் சமூக நீதியை மேம்படுத்துவதில் வெற்றிபெற்றது.

நிலைமாறுகால நீதிக்கான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதற்கு அப்போதைய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டதாக அவர் கூறினார்.

இந்த செயல்முறை 2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள், கொவிட்19 தொற்றுநோய் மற்றும் நாட்டில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு ஆகியவற்றால் தடைப்பட்டது. பல கொந்தளிப்புகளுக்கு மத்தியிலும் நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதில் உறுதியாக உள்ளோம் என்றார்.

# கலிபதுஷ்ஷாதுலி மஸா ஆலிம் மறைவுக்கு அனுதாபம்

தர்கா நகர் ஜமாஅத் கவுன்சில் தலைவர் பிரபல உலமா, விவாகப்பதிவாளர், கதீப், கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எஸ்.ஏ.எம். மஸா ஆலிமின் மறைவு தர்கா நகருக்கு மாத்திரம் அல்ல இலங்கை பூராகவும் உள்ள மக்களுக்கு பேரிழப்பாகும். விஷேடமாக தர்கா நகர் ஜமாஅத் கவுன்சில் ஊடாகவும் தர்கா நகரில் ஏற்படும் இனப்பிரச்சினைகளுக்கு சமாதான தூதுவராகவும் செயல்பட்டு தமது வாழ்நாளின் பெரும் பகுதியை சமூகப் பணிக்கே அர்ப்பணித்து அரும் பெரும் சேவை செய்துள்ளார். இவரின் மறைவு தர்கா நகர் மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியது என்று பிரபல எழுத்தாளர் சமூக சேவையாளர் பாஸி சுபைர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## பிழை திருத்தம்

2023.04.27ம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தல் கீழ்க்காணுமாறு திருத்தப்பட்டுள்ளதாக தயவுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

| தொடர் இல. | சொத்தின் தன்மை | குறைந்த பட்ச கேள்வி (மாதாந்தம்) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | கேள்வி வைப்புத் தொகை (மீளளிக்கப்படும்) |
|---|---|---|---|---|
| 01 | உடற்பயிற்சி நிலையம் | 9,500.00 | 2,500.00 | 5,000.00 |
| 02 | சிறுவர் பூங்கா | 10,500.00 | 2,500.00 | 5,000.00 |

- பெறுகைப் பத்திரங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் அடங்கிய ஆவணங்களை வழங்குதல் - 2023.05.22 பி.ப. 3.00 வரை
- கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்தல் - 2023.05.23 மு.ப. 9.30 இற்கு முன்பு
- கேள்விப் பத்திரங்கள் திறத்தல் - 2023.05.23 மு.ப. 10.00 இற்கு

**டி.எம்.டி.பீ.பீ. திஸாநாயக்க**
**செயலாளர்,**
**நாவலப்பிட்டிய நகர சபை.**



இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் மேதின விழா ஹற்றன் புகையிரதச் சந்தியில் ஆரம்பிக்கப்பட்டு டி.கே.டபிள்வு (D.K.W) மண்டபத்தை நோக்கி சங்கத்தின் தலைவர் நிசாந்த வன்னியராச்சி, பொதுச் செயலாளர் றொபட் பிரான்சீஸ், நிதிச்செயலாளர் மாரிமுத்து சுதாகர் உட்பட சங்கத்தின் முக்கியஸ்தர்கள் தலைமையில் பேரணி செல்வதையும் கலந்து கொண்டோரையும் படத்தில் காண்க. (படங்கள்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

# விலைமனுக் கோரல்

## சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

### 2023ஆம் ஆண்டில் சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் சீட்டிலுப்பு நிகழ்ச்சித்திட்டத்தை வீடியோ நாடாவில் பதிவு செய்து கொள்ளல் மற்றும் தொகுத்தல்களிற்கான விலைமனுக் கோரல்

| பெறுகை இலக்கம்: | DSD/HO/03/ACC/38/procu/23.ix | |
|---|---|---|
| பெறுகை விபரம்: | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமூக அபிவிருத்திப் பிரிவினால் ஒவ்வொரு மாதமும் இறுதி வாரத்தில் நடை முறைப்படுத்தப்படும் வீடமைப்பு லொத்தர் சீட்டிலுப்பு மூலம் சமுர்த்தி பெறுநர் ஒருவர் வெற்றியாளர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.<br>இந்நிகழ்ச்சித் திட்டமானது நாடாவில் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் 15 நிமிட வான் காலத்தில் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்கு ஏற்ற விதமாக தொகுத்து 05 DVD தட்டுகளில் வழங்குதல் வேண்டும்.<br>இதற்கான நிபந்தனைகள், விபரக்குறிப்புக்கள் மற்றும் பெறுகை விண்ணப்பப்படிவங்களை மீளளிக்கப்படாத ரூபா 500/- இற்கான தொகையை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் காசாசச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டைப் பெறுகைப் பிரிவில் சமர்ப்பித்து 2023.05.10 அன்று மு.ப. 10.00 முதல் 2023.05.30 பி.ப. 1.00 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் | |
| கேள்விகள் மூடப்படும் மற்றும் அவை திறக்கப்படும் நேரம் மற்றும் திகதி | திகதி 2023.05.31<br>நேரம் பி.ப. 2.00 | |
| தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக | பெறுகை இணைப்பு அலுவலர் | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்<br>படிநிலை 01, 4ஆம் மாடி, செத்சிரிபாய<br>பத்தரமுல்ல<br>தொ. பே. 011 2889006/011 2873795<br>தொலைநகல் 011 2876604 |

**பணிப்பாளர் நாயகம்,**
**சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்,**
**4ஆம் மாடி, சொத்திரிபாய, பத்தரமுல்ல.**

2023.05.10

# கல்முனையில் காணாமல் போன மாணவன் வெள்ளவத்தையில் கண்டுபிடிப்பு

*கல்முனை குறூப் நிருபர்*

பிரத்தியேக வகுப்புக்கு சென்று காணாமல் போனதாகக் கூறப்பட்ட கல்முனையை சேர்ந்த மாணவன் கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையில் தரம்10 ல் கல்வி பயிலும் (15 வயது) உடையார் வீதியைச் சேர்ந்த துஷ்யந்தன் டேவிட் தக்சிதன் எனும் மாணவனே கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு காணாமல் போயுள்ளதாக அவரது பெற்றோரினால் கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்முறைப்பாட்டிற்கமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் பல பொலிஸ் குழுக்கள் காணாமல் போன மாணவன் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

கல்முனைப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் படி இம்மாணவன் பிரத்தியேக வகுப்பிலிருந்து துவிச்சக்கரவண்டியுடன் வெளியேறி செல்வது சிசிடிவி கமராக் காணொளிகளில் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை தனது சகோதரன் காணாமல் போயுள்ள செய்தியறிந்து கொழும்பில் வசித்து வரும் காணாமல் போன மாணவனது சகோதரி நேற்று முன்தினம் திங்கட்கிழமை (8) இரவு வீடு வருவதற்கு கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்திற்கு சென்றபோது காணாமல் போனதாகக் கூறப்பட்ட தனது சகோதரன் அங்கு தனிமையில் இருப்பதை அவதானித்து அதிர்ச்சியடைந்தவராக தமது பெற்றோருக்கு உடனடியாக அறிவித்துள்ளார்.

இதற்கமைய பெற்றோர் கல்முனை பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து மேலதிக விசாரணைக்காக கொழும்பு நோக்கி உறவினர்களுடன் கல்முனை பொலிஸார் நேற்றுக்காலை பயணித்தனர். வெள்ளவத்தை மற்றும் கல்முனைப் பொலிஸார் இணைந்து இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல்

# ஷாதுலிய்யா ஸாவியாவில் 156 ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸ்



*பேருவளை விசேட நிருபர்*

இலங்கையின் முதலாவது பள்ளிவாசலாக 1100 ஆண்டுகளை கடந்து வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலுடன் இணைந்த ஷாதுலிய்யா ஸாவியாவில் 156 ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் ஆரம்ப வைபவம் ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுல் குலபா அஷ் ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் முஹம்மத் ஸூஹ்ர் ஆலிம் (பாரி)யின் அனுமதியோடு 12.05.2023 வெள்ளிக்கிழமை மாலை மஹ்ரிப் தொழுகையுடன் நடைபெறவுள்ளது.

கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் எம்.ஐ.எம் ரபீக் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறும் இம்மஜ்லிஸின் ஆரம்ப தின நிகழ்வில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அஸ் ஸெய்யித் அலவி ஸாலிஹ் மௌலானா (அல் முர்ஸி) விசேட சொற்பொழிவாற்றுவார்.

ஷாதுலிய்யா தரீக்காவின் ஸ்தாபகர் அல்குதுபுல் அக்பர் இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் 850 ஆவது வருட ஜனன தினத்தை முன்னிட்டும் ஷாதுலிய்யா தரீக்காவின் ஏனைய மஷாயிஹ் மார்களின் ஞாபகர்த்தமாகவும் மேற்படி மனாகிப் மஜ்லிஸ் 156 ஆவது வருடமாகவும் இந்த ஸாவியாவில் நடைபெறுகிறது.

இம்மஜ்லிஸ் 21 ஆம் திகதி தமாம் செய்யப்படும். தமாம் மஜ்லிஸில் ஷாதுலிய்யா தரீக்காவின் இலங்கைக்கான கலீபதுல் குலபாவும் காலி மாவட்ட ஜம்மியதுல் உலமா சபையின் தலைவருமான சங்கைக்குரிய மௌலவி அல்ஹாஜ் முஹம்மத் ஸூஹ்ர் ஆலிம் (பாரி) விஷேட சொற்பொழிவாற்றுவார் என ஸாவியா தர்மகர்தாக்களில் ஒருவரான அல்ஹாஜ் எம்.எம்.பயாஸ் ஜே.பி தெரிவித்தார்.

ஷாதுலிய்யா உலக ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய ஷேகு ஸஜ்ஜாதா அஷ்ஷெய்க் முஹம்மத் மஹ்தி அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ்ஷாதுலி அவர்களால் இலங்கைக்கான ஷாதுலி தரீக்காக்கான கலீபதுல் குலபாவாக நியமிக்கப்பட்டுள்ள மௌலவி அல்ஹாஜ் முஹம்மத் ஸூஹ்ர் ஆலிம் (பாரி) அவர்களுக்கு இம்மஜ்லிஸில் வரவேற்பளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதேச சபை வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் செயற்படுத்தும் விதிக் கோவையின் 6 – (i) பிரிவின் பிரகாரம்

## அதிகாரப் பிரதேசத்தின் பிரஜைகளுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

2024 ஆண்டிற்காக குளியாப்பிட்டிய பிரதேச சபையில் தயாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட அறிக்கையின் மூலதன செலவு மதிப்பீட்டிற்கு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு ஆலோசிக்கப்படும் முன்மொழிவுகள் இருப்பின் 2023.06.30ம் திகதிக்கு முன்னர் எனக்குச் சமர்ப்பிக்குமாறு தயவுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

2023.05.10ம் திகதி
குளியாப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்தில்

**ஆர்.டி.கே. அமரஜீவ,**
**செயலாளர்,**
**பிரதேச சபை, குளியாப்பிட்டிய.**
**தொலைபேசி** 037-4947212
**மின்னஞ்சல்** kuliyaps@yahoo.com

புத்தசாசனம், மதவிகாரம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

## தேசிய சுவடிகள் பாதுகாப்பு திணைக்களம்

தேசிய சுவடிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் மேல் வகுப்பு தொழில் நுட்பம் அல்லாத சேவை வகையின் விசேட தரத்தில் சிரேஷ்ட சுவடிகள் பாதுகாப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விபரங்கள் மற்றும் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு கீழ்க்காணும் இணையதளத்திற்கு பிரவேசியுங்கள்.
**www.archives.gov.lk**

**தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய சுவடிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

# பெறுகை அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

### ஒப்பந்த இலக்கம்: DGP/OS/04/clean.s./2023 - 2024

N-06

## சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ளல்

கொழும்பு -08 டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த இல. 118இல் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத் வளகத்தில் உத்தேச இடத்துடன் சம்பந்தப்பட்ட சுத்திகரிப்புச் சேவைகளை நடத்திச் செல்வதற்காக கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மாத்திரம் ஒருவருட காலத்திற்கு (2023/2024) தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக பூர்த்திசெய்ய வேண்டிய தகைமைகள் கீழ்க்காணுமாறு அமையும்.

1. வியாபாரத்தின் பெயர் பதிவு செய்யும் சட்டவாக்கத்தின் கீழ் மேற்படி சேவைக்காக பதிவு செய்திருத்தல்
2. அரச அமைச்சு, திணைக்களம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல் பற்றிக் குறைந்த பட்சம் கிட்டிய 03 வருட அனுபவம் இருப்பதுடன் தற்போது அவ்வாறான நிறுவனங்களுக்கு சேவை வழங்கும் நிறுவனமாக இருத்தல் வேண்டும். (கவனிக்கவும்:- விண்ணப்பத்துடன் மேற்படி இல. 1, 2 தகைமைகள் குறிப்பிடப்படும் சன்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.)
3. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அரச அச்சுத் திணைக்களத்தின் அரசாங்க அச்சகத்தின் பெயர் எழுத்துமூல வேண்டுதல் மேற்கொள்ளல் வேண்டும். மேற்படி வேண்டுதலின் பின்னர் மீளளிக்கப்படாத ரூ. 2,500.00 தொகையை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்த பின்னர் 2023.05.10 முதல் 2023.05.30 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் ஏனைய வழங்கல்கள் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் இக் கேள்வி ஆவணங்களை காசு செலுத்தாமலேயே பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. கேள்விதாரர் தமது கேள்வியுடன் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த வர்த்தக வங்கியில் இருந்து அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் ‘அரசாங்க அச்சகர்’ பெயரில் ரூ. 100,000.00 கேள்விப் பிணையொன்றை/ வங்கிப் பிணையொன்றை அல்லது மேற்படி பெறுமதியை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் காசாளர் கருமபீடத்திற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் அடங்கிய விண்ணப்பங்களை உறையொன்றில் இட்டு, 2023.05.31 பி.ப. 2.00 இற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது திணைக்களத்தின் ஏனைய வழங்கல்கள் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். உங்களது கேள்விகள் சமர்ப்பிக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘அரசாங்க அச்சுத திணைக்களத்தின் சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்வி 2023/2024’ என்று குறிப்பிடுதல் வேண்டும். 2023.05.31 பி.ப. 2.00 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைவதுடன் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். இவ்வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது பிரதி நிதி ஒருவருக்கு சமுகமளிக்கலாம்.
6. பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2023.05.24 பி.ப. 10.00 இற்கு திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறும்.
7. மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.30 வரை கீழ்க்காணும் முகவரியில் குறிப்பிடப்படும் அலுவலகத்தின் ஏனைய வழங்கல்கள் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டெக்டர் டென்ஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு -08.**

2023.05.10
**தொலைபேசி: 011 2673311/ பெக்ஸ்: 011 2698653**
**இணைய தளம்:** www.documents.gov.lk
**மின்னஞ்சல்:** othersupplydgp@gmail.com

## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

# விலைக்கோரல் அறிவித்தல் - 2023-05-10

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | கல்கிசை, பழைய புகையிரத நிலைய வீதி, இல. 08, வ/ப ஏஸ் புரபெட்டி இன்ஜினியர்ஸ் நிறுவனத்தின் வடிகானை விஸ்தரித்தல்<br>ஒப்பந்த இல:<br>NWSDB/GCWR/RCH/M-DM/2021/22R | 4,000/-+ VAT | ரூபா 49,500/- | கட்டிட நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7,C8,C9 தரத்தில் CIDA பதிவு | 3.3 மில்லியன் | பிபொமு (GCWRD), தேநீவவச, இல. 26/2, அத்திடிய வீதி, இரத்மலானை.<br>Tele : 011 2623681<br>Fax : 011 2636205<br>மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் 1994381 எனும் பிரதான நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும். பெயரை "Tender Fees-DGM Tender Board" எனக் குறிப்பிடுதல் வேண்டும். | 24/05/2023 மு.ப. 10.00 மணி |
| 02 | சிலாபம் நீர் வழங்கல் திட்டத்திலுள்ள கரவிட்டாகார குழாய் வழி விஸ்தரிப்பில் வால்வு அறைகள், குழாய் இணைப்புகள் மற்றும் சேவை இணைப்புகளை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல:<br>RSC(NW)/DEV/C/CRIWMP/ CHILAW/2023/30 | 6,000/-+ VAT ** | ரூபா 75,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7,C8,C9 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 7.5 மில்லியன் | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele : 037-2223158<br>Fax : 037-2230086 | 31/05/2023 பி.ப. 2.00 மணி |
| 03 | தலாவ நீர் வழங்கல் திட்டத்தின் தற்போதுள்ள புதிய குழாய் வழியின் விஸ்தரிப்பு மற்றும் உள்ளக இணைப்புகளுக்காக HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், வால்வுகள் மற்றும் விசேடங்களைப் பதித்தல்<br>ஒப்பந்த இல :<br>NRW/NC/DGM/LAYING/ APS/2023/012 | 4,000/-+ VAT | ரூபா 60,450/- | Registration with CIDA in the field of Water Supply & Sewerage in Grade C7 , C8, C9 | 4.57 மில்லியன் | பிஓநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநராதபுரம்.<br>Tele : 025-2235993<br>Fax : 025-2225609 | 24/05/2023 பி.ப. 2.00 மணி |
| 04 | வவுனியாவிலுள்ள அவுசதபிட்டிய PH 1இல் விநியோக வழிகளை பூர்த்தி செய்வதற்காக HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களை பதித்தல்<br>ஒப்பந்த இல :<br>RSC/N/DGM/GOSL(CEDE-RH)/ LAYING OF HDPE/DI PIPE- AVUSATHAPITIYA/2023/013 | 12,500/-+ VAT ** | ரூபா 206,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5,C6,C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 20.5 மில்லியன் | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele : 024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax : 024-2225088/ 024-2227341 | 31/05/2023 பி.ப. 2.00 மணி |
| 05 | வவுனியா நீர் வழங்கல் திட்டம் - வவுனியா பிராந்தியம் - படிநிலை II இல் (அரபா நகர்) விநியோக வழிகளை பூர்த்தி செய்வதற்காக HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களை பதித்தல்<br>ஒப்பந்த இல :<br>RSC/N/DGM/GOSL(CEDE-RH)/LAYING OF HDPE/DI PIPE- FITTING-ARAFANAGER/PHASE-II/2023/014 | 12,500/-+ VAT ** | ரூபா 212,700/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5,C6,C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 21.26 மில்லியன் | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele : 024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax : 024-2225088/ 024-2227341 | 31/05/2023 பி.ப. 2.00 மணி |
| 06 | பதுளை நீர் வழங்கல் திட்டத்தின் ஜஜஸ்ட்ஹில் கிளை வீதி, விஜய ஒழுங்கை, பத்தலவத்த எல வீதி மற்றும் சிறிமல்கொடஎல வீதிகளில் AC குழாய் பிரதியீடு செய்வதற்காக அகழ்தல் மற்றும் மீள் நிரப்புதல்<br>ஒப்பந்த இல:<br>RSC(UVA)/DGM(UVA)/NRW/ BADULLA/2023/64 | 12,500/-+ VAT ** | ரூபா 325,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5,C6,C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 21.7 மில்லியன் | பிஓநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele : 0552230934<br>Fax : 0552230974/ 0552222448 | 24/05/2023 பி.ப. 2.00 மணி |
| 07 | மொரேதொட்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் தற்போதுள்ள கட்டமைப்பு புனரமைப்புகளின் மிகுதி வேலைகள்<br>ஒப்பந்த இல:<br>RSC(UVA)/DGM(UVA)/REH/ MORETHOTA/2023/72 | 6,000/-+ VAT | ரூபா 68,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7,C8,C9 தரத்தில் CIDA பதிவு | 4.57 மில்லியன் | பிஓநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele : 0552230934<br>Fax : 0552230974/ 0552222448 | 24/05/2023 பி.ப. 2.00 மணி |
| 08 | மாத்தளை பழைய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் ஊயைமெ டுமைெ வேலியை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல:<br>RSC-C/CN/CIVIL/RH/MATALE WTP/2023/034 | 6,000/-+ VAT ** | ரூபா 73,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C6,C7,C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 7.3 மில்லியன் | பிஓநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax : 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P- 081 2492311) | 24/05/2023 பி.ப. 2.00 மணி |
| 09 | A9 வீதியில் தற்போதுள்ள இணைப்புகளை இடமாற்றுதல் மற்றும் HDPE, DI குழாய்களைப் பதித்தல்<br>ஒப்பந்த இல:<br>RSC-C/CN/NRW/CIVIL/ MATALE/2023/33 | 12,500/-+ VAT ** | ரூபா 110,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5,C6,C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 11.2 மில்லியன் | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax : 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-05-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P- 081 2388086) | 24/05/2023 பி.ப. 2.00 மணி |
| 10 | புஸ்ஸல்லா நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மந்தகதி மணல் வடிகட்டியின் புனரமைப்பு வேலைகள்<br>ஒப்பந்த இல:<br>RSC-C/CN/CIVIL/RH/PUSSELLA WTP/2023/052 | 6,000/-+ VAT ** | ரூபா 70,000/- | கட்டிட நிர்மாணத் துறை / நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6,C7,C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6.9 மில்லியன் | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax : 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-05-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P- 081 2492311) | 24/05/2023 பி.ப. 2.00 மணி |
| 11 | உக்குவளை நீர் வழங்கல் திட்டம் வருமானமற்ற நீர் குறைப்பின் நீர்க்கசிவு திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல: RSC-C/CN/CIVIL/ O&M/UKUWELA/2023/32 | 6,000/-+ VAT ** | ரூபா 60,000/- | கட்டிட நிர்மாணத் துறை / நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6,C7,C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 5.6 மில்லியன் | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax : 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-05-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P- 081 2492311) | 24/05/2023 பி.ப. 2.00 மணி |
